# பத்தாம் வகுப்பு
# தமிழ்க் கற்றல் கையேடு-2024-25


| தலைப்பு | பக்க எண். |
|---|---|
| பலவுள் தெரிக | 1-4 |
| குறுவினா | 4-8 |
| சிறுவினா | 8-14 |
| நெடுவினா | 15-21 |
| விரிவானம் | 21-24 |
| பொதுக்கட்டுரை | 24-27 |
| கடிதம் | 27-31 |
| கலைச்சொல்லாக்கம் | 31-32 |
| அணி | 32-33 |
| படிவங்கள் | 34-37 |
| காட்சியைக் கண்டு கவினுற | 33 |
| நிற்க அதற்கு தக | 41-52 |
| மனப்பாடப் பாடல் | 41-52 |
| மொழியோடு விளையாடு | 41-52 |
| மொழியை ஆள்வோம் | 41-52 |
| கற்பவை கற்றபின் | 41-52 |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பலவுள் தெரிக.

இயல் – 1

**1.'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது**

விடை : வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

**2.'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது** விடை :சருகும் சண்டும்

**3.எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்** **விடை :எம் + தமிழ் + நா**

**4.'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே** விடை : ஈ) பாடல்; கேட்டவர்

**5.வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை** விடை :மணி வகை

**இயல்-2**

**6"உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?** விடை : மோனை, எதுகை

**7.செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**

**செய்தி 2 : காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.**

**செய்தி3: காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள்தமிழர்கள்.**

விடை :செய்தி 1, 3 ஆகியன சரி

**8.'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

விடை : கடல்நீர் ஆவியாகி மேகமாதல்

**9.'பெரிய மீசை' சிரித்தார் - சொல்லுக்கான தொகையின் வகை எது?** விடை :அன்மொழித்தொகை

**10.பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | |
|---|---|---|---|
| i) | கொண்டல் | - | 1. மேற்கு |
| ii) | கோடை | - | 2. தெற்கு |
| iii) | வாடை | - | 3. கிழக்கு |
| iv) | தென்றல் | - | 4. வடக்கு |

**விடை :3, 1, 4, 2**

**இயல்-3**

**11.பின்வருவனவற்றுள் முறையான தொடர்.**

**அ)தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.**

**ஆ)தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.**

**இ)தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

**ஈ)தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.**

**விடை: இ)தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

12."சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ___________

**விடை:சிற்றூர்**

13.அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

**விடை :வேற்றுமை உருபு**

**14.காசிக்காண்டம் என்பது __________**

விடை :காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

**15.விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.**

விடை : இன்மையிலும் விருந்து

**16.எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?** விடை : கூவிளம் தேமா மலர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**இயல்-4**

**17.'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?** விடை : **இறைவனிடம் குலசேகராழ்வார்**

**18.தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**
**தலைப்பு:செயற்கை நுண்ணறிவு**
**குறிப்புகள்: கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.**
**திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.**
விடை :தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

**19.பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?**
விடை :வானத்தையும் பேரொலியையும்

**20.குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார். ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே**
விடை :பால் வழுவமைதி, திணை வழுவமைதி

**21.பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?** **விடை:இலா**

**இயல்-5**

**22.'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி __________.** விடை : சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

**23.அருந்துணை என்பதைப் பிரித்தால் __________.** **விடை** அருமை + துணை

**24."இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது __________ வினா. 'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது __________ விடை.** விடை: அறியாவினா, சுட்டுவிடை

**25"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?** விடை: கல்வி

**26.இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் __________ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் __________.**
விடை :மன்னன், இறைவன்

**இயல்-6**

27.குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் **விடை :குறிஞ்சி,மருதம்,நெய்தல் நிலங்கள்**

28. கூற்று 1: போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
கூற்று 2:அவருக்குள் இருந்த கலைத் தன்மை வளர அது உதவியது. **விடை : ஈ)கூற்று 1 மற்றும் 2 சரி**

**29.மலர்கள் தரையில் நழுவும் எப்போது-?** **விடை : தளரப்பிணைத்தால்**

30. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில் தான்,கலைஞர் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது . இத்தொடருக்கான வினா எது?
**விடை :ஆ)கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது?**

31.கோசல நாட்டில் வறுமை இல்லாததற்குக் காரணம் என்ன? **விடை: அங்கு வறுமை இல்லாததால்**

**இயல் - 7**

**32.சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**
அ)உழவு, மண், ஏர், மாடு ஆ)மண், மாடு, ஏர், உழவு இ)உழவு, ஏர், மண், மாடு ஈ)ஏர், உழவு, மாடு, மண்
விடை : இ)உழவு, ஏர், மண், மாடு

**33.'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' -மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே __________.** **விடை:திருப்பதியும் திருத்தணியும்**

**34.'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' - என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்?** **விடை : நெறியோடு நின்று காவல் காப்பவர்**

**35.இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம்**
விடை:வலிமையை நிலைநாட்டல்

**36.தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது _________** விடை :சிலப்பதிகாரம்

**இயல் -8**

**37.மேன்மை தரும் அறம் என்பது ___________.** விடை:கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.

**38.வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது ___________.**
விடை:இடையறாது அறப்பணி செய்தலை

**39.உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்** **விடை: அதியன்; பெருஞ்சாத்தன்**

**40.காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் விடை:**இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.

**41.சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ________** விடை : அகவற்பா

**இயல் -9**

**42."பிரிந்தன புள்ளின் கானில்**
**பெரிதழுது இரங்கித் தேம்ப "**
பாடலடியில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க. **விடை:காடு,வாட**

**43.சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது __________.**
விடை : பெற்றசுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

**44.பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ___________, ___________ வேண்டினார்.**
**விடை : கருணையன்,எலிசபெத்துக்காக**

**45.வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி?** விடை : உருவகம்

**46.கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது?** விடை:சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

**குறு வினா விடை**

**இயல் -1**

**1) மன்னும் சிலம்பே மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! –இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**
சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

**2) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**–மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**சரியான தொடர்கள்**
1) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
2) ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையானத் தொடர் :** ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
**பிழைக்கான காரணம் :** தாறு–வாழைக்குலை சீப்பு – வாழைத் தாற்றின் பகுதி

**3) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**
இன்று நல்ல நகை எங்கு உள்ளது?வீட்டிலும் இல்லை.கடையிலும் இல்லை.
நகை – சிரிப்பு,அணிகலன்.

**4)வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**
வேங்கை – தனிமொழி – வேங்கை மரம் வேம் + கை – தொடர்மொழி – வேகின்ற கை
பொதுமொழி – வேங்கை மரம், வேகின்ற கை

**5)'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்கண் வற்றாகும் கீழ்'–இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச்சுட்டி,அதன்இலக்கணம் தருக**
உடுப்பதூஉம், உண்பதூஉம் – இன்னிசை அளபெடை.
செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசைஅளபெடையாகும்.

**இயல் -2**

**1)'நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் – மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்'**
**–இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.**

1.நன்மை...நன்மை.. சுத்தமான காற்றே நன்மை! 2.புகை....புகை.... காற்றிற்குப் பகை!

**2.வசன கவிதை குறிப்பு வரைக.**

- ❖ உரைநடையும் கவிதையும் சேர்ந்து,இலக்கணத்தைத் தாண்டி உருவாக்கப்பட்டவை வசனகவிதை.
- ❖ தமிழில் வசனகவிதையைப் பாரதியார் அறிமுகப்படுத்தினார்.

**3.பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

- ❖ தம்பி அழாதே! தம்பி கவலைப்படாதே!
- ❖ இதோ அப்பா,அம்மா வந்து விடுவார்கள். இனிப்பு வாங்கி வருவார்கள்.

**4. மாஅல் – பொருளும், இலக்கணக் குறிப்பும் தருக.**

- ❖ மாஅல் பொருள் – திருமால்– பேருருவம்
- ❖ இலக்கணக்குறிப்பு – செய்யுளிசை அளபெடை,உரிச்சொல் தொடர்

**45.தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.**

- ❖ தண்ணீர் குடி – தண்ணீரைக் குடி –நல்ல தண்ணீரைக் குடித்தேன்.
- ❖ தயிர்க்குடம் –தயிரை உடைய குடம் – தயிர்க்குடம் எது?

**இயல் –3**

**1.விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

- ❖ **வணக்கம்!வணக்கம்!வாருங்கள்!வாருங்கள்!அமருங்கள்!**
- ❖ **தண்ணீர் குடியுங்கள்!பழங்கள் சாப்பிடுங்கள்!**

**2.'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.**

- ❖ விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாதது இல்லை.
- ❖ இனிய வரவேற்பும்,அன்பான சொல்லும் விருந்தோம்பலுக்குப் போதும்.

**3.இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.**

உணவாகத் தினைச் சோற்றைப் பெறுவீர்கள்.

**4.'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?**

'சிரித்து பேசினார்' என்பது, மகிழ்ச்சி காரணமாக 'சிரித்து சிரித்து பேசினார்' என அடுக்குத்தொடராகும்.

**5.பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?.**

பெயர்ப் பயனிலை– கவிஞர் வினை பயனிலை– சென்றார் வினா பயனிலை – யார்?

**6.நச்சப்படாதவன் செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

யாருக்கும் உதவி செய்யாதவன்.

**7.கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடிஉண் டாயினும் இல்–இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.**

1.கொடுப்பதூஉம் – இன்னிசை அளபெடை 2.துய்ப்பதூஉம் –இன்னிசை அளபெடை

**8.பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

**உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும்** – உயிரினும் ஓம்பப் படும்
**ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது** – நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று
**ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர்** – ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை

**9.எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?**

கூவிளம் தேமா மலர்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இயல் – 4

**1.வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

1) செயற்கை நுண்ணறிவு வாகனங்கள் 2)செயற்கை நுண்ணறிவு இயந்திர மனிதன்.

**2.மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

மருத்துவர் புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மை என்று நோயாளி மருத்துவர் மீது அன்பும் நம்பிக்கையும் காட்டுவார்.

**3.உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு.

**4.வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

திட்டமிட்டிருக்கும் உறுதித்தன்மையால் காலவழுவமைதி ஆகும்.

**5.சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான்.புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்கமாட்டான் என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் – இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.**

சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் **கேட்கும்**. புதியவர்களைப் பார்த்துக் **குரைக்குமே** தவிர **கடிக்காது** என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினான்.

## இயல் – 5

**1.செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.**

- பெருக்குவோம்! பெருக்குவோம்!
  அருளைப் பெருக்குவோம்!
- பெருக்குவோம்! பெருக்குவோம்!
  அறிவைப் பெருக்குவோம்!

**2.கழிந்த பெரும்கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்' – இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?**

1.குலேசபாண்டியன். 2.இடைக்காடனார்.

**3.அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அமர்ந்தான் - அமர் + த் (ந்) + த் + ஆன்
அமர் –பகுதி
த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
த் –இறந்தகால இடைநிலை
ஆன் –ஆண்பால் வினைமுற்று விகுதி

**4.இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ. இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? – மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.**

1)மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? **– அறியாவினா**
2)இதோ.... இருக்கிறதே! **– சுட்டு விடை**
3) சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? **– ஐயவினா**

## இயல்–6

**1.காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.**

**முதற்பொருள்:** காடு, கார்காலம், மாலை
**கருப்பொருள் :** வரகு, சாமை.

**2."கலைஞர்,பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர்.படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" –பேராசிரியர் அன்பழகனார்.**

**–இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.**

கலைஞரைப் பழுமரக் கனிப் பயன் கொள்ளும் பேச்சாளராகவும் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளராகவும் பேராசிரியர் அன்பழகனார் கூறினார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3.உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?**

- கும்பகருணனே! உன் பொய்யான வாழ்க்கை இனி இறக்கப் போகின்றது.
- எமனுக்குத் தூதானவர் கையிலே படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.

**4.சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்'- இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.**

- அமைதியான உலகத்தைச் சுமக்கின்ற மென்மையான தண்டுகள் பெண்கள்.
- பெண்கள் மென்மையானவர்கள்.
- அவர்களால் தான் அமைதியான உலகத்தை ஆட்சி செலுத்த முடியும்.

**5.கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களைத் திருத்தி எழுதுக.**

உழவர்கள் மலையில் உழுதனர்.முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

குறவர்கள் மலையில் தேனெடுத்தனர்.

நெய்தல்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர்கள் கடலுக்குச் சென்றனர்.

**6.கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.** தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைப்பவர்.

**2.தஞ்சம் எளியன் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.**

தஞ் /சம் – நேர் நேர் – தேமா எளி / யர் – நிரைநேர் – புளிமா பகைக் /கு – நிரைபு – பிறப்பு

**3.வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?**

இகழாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் உதவி கேட்டு வருபவரின் உள்ளம் மகிழ்ச்சி அடையும்.

**4.பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.**
**(பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்)**

உழைத்ததால் கிடைத்த ஊதியம் – கூரான ஆயுதம்

ஏனென்றால் அது பகைவனை வெல்லும் கூரான ஆயுதம்.

## இயல் – 7

**1.வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.**

ம.பொ.சி. வறுமையினால் பழைய புத்தகங்கள் வாங்கி படிப்பார்.

இவர் பல நேரங்களில் பட்டினி கிடந்து புத்தகம் வாங்கி மகிழ்ச்சி அடைவார்.

**2.பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். –ம.பொ.சி.

**3.மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?**

மன்னர் தன் நாட்டின் வளம், ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றைக் காலம் கடந்த பிறகும் அழியாமல் இருக்க கல்லில் செதுக்கினார்கள். இதுவே மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கமாகும்.

**4.பாசவர்,வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?**

1.பாசவர்–வெற்றிலை விற்பவர்கள் 2.வாசவர்–நறுமணப்பொருட்களை விற்பவர்கள்
3.பல்நிணவிலைஞர்– இறைச்சிகளை விலைகூறி விற்பவர்கள் 4.உமணர்– உப்பு விற்பவர்

**5.புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.**

வெட்சித் திணை × கரந்தைத் திணை,வஞ்சித் திணை X காஞ்சித் திணை,நொச்சித் திணை x உழிஞைத் திணை

## இயல் – 8

**1.குறிப்பு வரைக: அவையம்.**

- அவையம் அரசனின் ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
- அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது.

**2. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?**

வாளித்தண்ணீர், சாயக்குவளை,துணிகந்தையானாலும், சாயம்அடிக்கும் தூரிகைகட்டையானாலும் சுத்தம் செய்வது போல, காலக்கழுதை கட்டெறும்பான பின்னும் அறப்பணி தொடர்கிறது.

**3.'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க! உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது.**

**அ) அடி எதுகையை எழுதுக. ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக: கொள்க, குரைக்க.**

அ)அடி எதுகை : கொள்வோர், உள்வாய்

ஆ)இலக்கணக்குறிப்பு: கொள்க, குரைக்க – வியங்கோள் வினைமுற்று

**4.குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

- ❖ குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
- ❖ முதலடி நான்கு சீராகவும், இரண்டாம் அடி மூன்று சீராகவும் வரும்.

எ.கா: பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லைப் பொருள்.

**5.வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.**

வஞ்சிப்பா தூங்கல் ஓசையையும், கலிப்பா துள்ளல் ஓசையையும் பெற்று வரும்.

**இயல் – 9**

**1.நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.**

- ❖ நான் எழுதுவதற்குத் தூண்டுதலும் உண்டு.
- ❖ நான் எழுதுவதற்குத் காரணமும் ஒன்றுண்டு.

**2. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக்குறித்துக் கூறுகிறார்?**

தலைக்கனம் பிடித்தவர் வாழும் இடத்தில் வறுமை காரணமாகத் தலையில் கல் சுமந்து தலைக்கனமாகவே வாழ்கிறாள் சித்தாள்.

**3. காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் –உவமை உணர்த்தும் கருத்து யாது?**

நெல் முற்றும் முன் காய்வது போல கருணையன் தன் தாயை இழந்து வாடுகின்றார்.

**4.தீவக அணியின் வகைகள் யாவை?**

முதல் நிலைத் தீவகம்,இடைநிலைத்தீவகம்,கடைநிலைத் தீவகம் என மூன்று வகைப்படும்.

**சிறுவினா விடை**

**இயல் -1**

**1) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

- ❖ அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
- ❖ பழைமையான நறுங்கனியே! குமரிக்கண்டத்தை ஆண்டவளே!
- ❖ மண்ணுலகப் பேரரசே! பாண்டியனின் மகளே!திருக்குறளின் பெருமைக்குரியவளே!
- ❖ பாட்டும்,தொகையும் ஆனவளே! கீழ்க்கணக்கே!சிலப்பதிகாரமே! மணிமேகலையே!
- ❖ தமிழே! உன்னைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

**2.தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.(சிறுவினா)**

| தமிழ் | கடல் |
|---|---|
| முத்தமிழாய் வளர்ந்தது. | முத்து,அமிழ்தம் தருவது. |
| முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | மூன்று வகையான சங்குகளைத் தருகின்றது. |
| ஐம்பெருங்காப்பியங்களால் அணியப்பட்டது. | வணிகக் கப்பல்கள் மிகுதியாகச் செல்கின்றது. |
| சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர். | அலை சங்கினைத் தடுத்து காக்கின்றது. |

**2)புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

1)தென்னம் பிள்ளை நட்டேன். 2)பனை வடலி நட்டேன். 3)நெல் நாற்று நட்டேன்
4)வாழைக்கன்று நட்டேன். 5) சோளப் பைங்கூழ் நட்டேன்.

**இயல் -2**

**1.உயிராக நான்,பல பெயர்களில் நான்,நான்கு திசைகளிலும் நான்,இலக்கியத்தில் நான், முந்நீ நாவாய் ஓட்டியாக நான்........ முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப்பற்றிப் பேசுகிறது.இவ்வாறு 'நீர்' தன்னைப்பற்றிப் பேசினால் உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.**

1.உணவாக நான் 2.நீரே!நீவீரே! 3.என் கண்ணீர் 4.உயிர்நீர் 5.நானே நீர்

**2.சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.**

**மின் விசிறிக் காற்று** : வணக்கம் நண்பா!ஏன் கவலை!
**சோலைக்காற்று** : வணக்கம் நண்பா!நோய் வந்துவிட்டது.
**மின் விசிறிக் காற்று** :ஏன்?எப்படி?நண்பா!
**சோலைக்காற்று** :மனிதனின் ஆலைப்புகையும் சாலைப்புகையும் தான் காரணம்.
**மின் விசிறிக் காற்று** :என்னைச் சுத்தப்படுத்தும் மனிதன்..உன்னை மறந்துவிட்டானே!
**சோலைக்காற்று** :ஆம்!நண்பா!

**3.'தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள்.வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.**

**மல்லிகைப்பூ**

- இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.
- மல்லிகை என்னும் பூ

**பூங்கொடி**

- உவமைத் தொகை
- பூப் போன்ற கொடி

**தண்ணீர்த் தொட்டியில்**

- இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
- தண்ணீரை உடைய தொட்டி

**குடிநீர் நிரப்பினாள்**

- இரண்டாம் வேற்றுமைத் தொகை குடிநீரை நிரப்பினாள்

**4.மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

**குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் – ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**

- ஊசி போல வந்த பெரிய மழை நின்றது.
- பச்சைப் பாசி போல **இலைகளில் சொட்டும் நீர்** வடிந்தது.
- இரும்பு போல **உடலில் ஓடும் மெல்லிய குளிர்** அடித்தது.தாமரை மொட்டுகள்
- நிலா போல **தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள்** தாமரை மொட்டுகள்.
- அருவி போல **ஓடும் நீரில் காகிதக் கப்பல்** சென்றது.

**இயல் -3**

**1.'கண்ணே கண்ணுறங்கு! காலையில் நீயெழும்பு**
**மாமழை பெய்கையிலே மாம்பூவே கண்ணுறங்கு!**
**பாடினேன் தாலாட்டு ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

'கண்ணே கண்ணுறங்கு – விளித்தொடர்
காலையில் நீயெழும்பு – ஐந்தாம் வேற்றுமை தொகாநிலைத் தொடர்
மாமழை பெய்கையிலே – உரிச்சொல் தொடர்
மாம்பூவே கண்ணுறங்கு – விளித்தொடர்
பாடினேன் தாலாட்டு – வினைமுற்றுத் தொடர்
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு – அடுக்குத்தொடர்

**2."பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" வினவுவது ஏன்?**

- பழங்காலத்தில் பலரும் செல்லும் அளவிற்கு வீடுகளில் பெரிய வாசல் இருந்தது.
- அதனை இரவில் மூடுவதற்கு முன்னர்,இன்னும் உணவு உண்ணாமல் யாராவது இருக்கிறீர்களா? என்று கேட்டு விட்டு தான் வாசல் கதவை மூடுவார்கள்.
- இதனையே கேட்கும் வழக்கமாக வைத்திருந்தனர்.

**3. புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.திருவிழாக்காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக,**

- அன்றைய காலத்தில் ஏழைகளுக்கு உணவு கொடுத்து விருந்தோம்பல் செய்தனர்.
- பிறகு உறவினர்களுக்கு மட்டும் உணவு கொடுத்து விருந்தோம்பல் செய்தனர்.
- பிறகு உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உணவு கொடுத்து விருந்தோம்பல் செய்தனர்.
- மக்களின் மன மாற்றமே இதற்குக் காரணம்.

**4.கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?**

- பகலில் ஓய்வு எடுத்துச் செல்லுங்கள். இரவில் தங்குங்கள்.
- பூங்கொத்துகளை அணிந்து கொள்ளுங்கள்.
- மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.
- உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்கள் வீட்டிற்குள் செல்லுங்கள்.
- அவர்களும் உறவினர் போலப் பழகிப் பேசுவார்கள்.
- நெய்யில் வெந்த மாமிசம்,தினைச் சோறு ஆகியவற்றை உணவாகக் கொடுப்பார்கள்.
- நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**இயல் -4**

**1. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

- இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன.
- அறிவியல் கண்டுபிடிப்புகளால் மனிதன் அனைத்து வேலைகளையும் வேகமாகச் செய்து முடிக்கின்றான்.
- அறிவியல் கண்டுபிடிப்புகளால் கடினமான வேலையும் எளிமையாகின்றன.
- அறிவியல் கண்டுபிடிப்புகளால் விவசாயம் வளர்ச்சி அடைகின்றது.
- அறிவியல் கண்டுபிடிப்புகளால் கல்வி வளர்ச்சி அடைகின்றது.

**2.மூளையைப் போன்றது. செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத,சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது.இதனால் மனித குலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் எழுதுக.**

**எதிர்காலத் தொழில்நுட்பம்**

- ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்து முடிக்கலாம்.
- காலம் வீணாவதைத் தடுக்க முடியும்.
- நமக்குத் தேவையான கதை,கட்டுரையை எழுதித் தரும்.
- கடினமான கணக்குகளை எளிமையாகப் புரிய வைக்கும்.
- புரியாத பாடங்களை எளிமையாகப் புரிய வைக்கும்.
- விவசாயம் வளர்ச்சி அடையும்.விளைச்சல் பெருகும்.
- கல்வி வளர்ச்சி அடையும்.

**3.'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**
**(அல்லது) குலசேகரர் திருவித்துவக் கோட்டம்மா இறைவனிடம் வேண்டுவது யாது?**

- மருத்துவர் புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மை என்று நோயாளி மருத்துவர் மீது அன்பு காட்டுவார்.
- அது போல வித்துவக்கோட்டம்மா!
- நீ எனக்குத் துன்பத்தைத் தந்தாலும், நான் உன் அருளையே எதிர்பார்த்து வாழ்கிறேன்.

**4.நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், இலச்சுமி கூப்பிடுகிறாள், போய் பார்ல் என்றார். 'இதோ சென்றுவிட்டேன் என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, ல்என்னடா விளையாட வேண்டுமா? என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள், அவளிடம், 'நீயும் இவனும் விளையாடுங்கள் என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். இப்பத்தியிலுள்ள வழுக்களைத் திருத்தியும் வழுவமைதிகளைப் பட்டியலிட்டும் எழுது.**

**திருத்தப்பட்டவை :**

1)நேற்றிரவு பெய்த மழை தொட்டியை நிறைத்தது.
2)வாழைத் தோட்டத்தில் கன்றுடன் நின்றிருந்த மாடு கதறியது.
3)துள்ளிய கன்றைத் தடவிக்கொடுத்த....

**வழுவமைதி**

கால நேற்று பெய்த மழை தொட்டியை நிறைத்திருந்தது. –காலவழுவமைதி
இலட்சுமி கூப்பிடுகிறாள். – திணை வழுவமைதி

இதோ சென்றுவிட்டேன். – காலவழுமைதி
என்னடா விளையாட வேண்டுமா? – திணை வழுவமைதி
அவனை அவிழ்த்து விட்டேன். – திணை வழுவமைதி
இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். – திணை வழுவமைதி

**இயல் -5**

**1.உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?**

- படிக்காதவர் என்று உன்னை யாரும் மதிக்கமாட்டார்கள்.
- எதிர்காலத்தில் துன்பமே கிடைக்கும்.
- படித்தால் நல்ல வேலைக்குப் போக முடியும்.
- படித்தால் நல்ல பண்புகள் வரும்.
- படித்தால் மதிப்பு கிடைக்கும்.
- படித்தால் அனைவரும் போற்றுவார்கள்.
- படித்ததால் மற்றவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கலாம்.
- படித்தால் அப்துல் கலாம் ஐயா போல வாழ்க்கையில் உயரலாம்.

**2. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

**ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது. ஆனால் ஒருவர் பேசும்போதே மொழி பெயர்ப்பது,விளக்குவது என்று(InterPreting)சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணி கேட்பியில் (HeadPhone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வெளியே பேசுவார்.அவையில் உள்ளபார்வையாளர் தன்முன் உள்ள காதணி கேட்பியை(HeadPhone)எடுத்துபொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.**

இப்பகுதியில் இருந்து 5 வினாக்களை உருவாக்குக.

1. ஐ.நா.அவையில் உறுப்பினர்கள் தம் மொழியில் பேசும்போது மொழி தெரியாதவர்களுக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?
2. மொழி பெயர்ப்பு என்றால் என்ன?
3. பார்வையாளர்கள் அவையில் பேசுவோர் உரையை எப்படிப் புரிந்து கொள்கின்றனர்? மொழிபெயர்ப்பாளர்கள் எங்கு அமர்ந்திருப்பர்?
4. ஐ.நா.அவையில் செய்யப்பட்டுள்ள வசதி யாது? காதணி கேட்பியை எதற்குப் பயன்படுத்துவர்?
5. ஐ.நா.அவையில் பேசுவோரின் பேச்சு எவ்வளவு நேரத்தில் மொழிபெயர்க்கப் படுகிறது?

**3. மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.**

- மன்னன், புலவர் இடைக்காடனார் பாடிய பாடலை கவனிக்காமல் அவமதித்தான்.
- புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
- புலவருக்காக இறைவன் மதுரையை விட்டு வேறு இடம் சென்றார்.
- இதையறிந்த மன்னன் இறைவனிடம் முறையிட்டான்.
- இறைவன், புலவரின் பாடலை அவமதித்தது தான் குற்றம் என்றார்.
- தவறை உணர்ந்த மன்னன் புலவனுக்குச் சிறப்பு செய்தார்.

**4.முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். –இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

**பொருள்கோள்** : ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

**இலக்கணம்** :

ஆற்றுநீர் செல்வதைப் போல நேராகவே பொருள் கொள்ளுதல் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

**விளக்கம்** :

முயற்சி செல்வம் தரும்; முயற்சி செய்யாமை வறுமை தரும் என்று ஆற்றுநீர் செல்வதைப் போல நேராகவே பொருள்கொள்ளும் முறையில் அமைந்திருப்பதால் இது ஆற்று நீர்ப் பொருள்கோள் ஆயிற்று.

**இயல் -6**

**1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

- ❖ கால்களில் தங்கச் சிலம்புகள் ஆடின.
- ❖ இடுப்பில் அரைஞாண் கயிற்றில் அரை வட்டங்கள் ஆடின.
- ❖ தொந்தியுடன் சிறு வயிறு ஆடியது.
- ❖ நெற்றியில் வட்டவடிவான சுட்டி ஆடியது.
- ❖ காதில் தோடுகள் ஆடியது.
- ❖ கொண்டையில் முத்துக்கள் ஆடியது.
- ❖ முருகனே! செங்கீரை ஆடுவாயாக.உடல் ஆட,செங்கீரை ஆடுக.

**2.நவீன கவிதையில் வெளிப்படும் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக. நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகின்றது.ஒப்பிட்டு எழுதுக.**

- நவீன கவிதையில் பூக்கட்டும் காட்சி,நாட்டுப்புறப்பாடல்களிலும் அழகாகக் காட்சி அளிக்கின்றது.
- நவீன கவிதையில் பூவையும் பெண்ணையும் இணைத்துக் கூறியுள்ளனர்.
- நாட்டுப்புறப் பாடல்களில் பூவையும் மாரியம்மனையும் இணைத்துக் கூறியுள்ளனர்.
- நவீன கவிதையில் கையால் பூப்பறித்தால்,பூவின் கழுத்து முறியும் என்கின்றது.
- நாட்டுப்புறப்பாடலில் கையால் பூப்பறித்தால்,பூவின் காம்பு அழுகும் என்கின்றது.

**3.'கடற்கரையில் உப்புக்காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப்பகுதியில் மலைப்பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத்தொழிலும் நடைபெறுகின்றன'– காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும் பண்டைத் தமிழரின் திணைநிலைத்தொழில்கள் இன்றளவுதொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக**

- ❖ முல்லைத்திணையின் தொழில் ஆடு மாடு மேய்த்தல் ஆகும்.பால்,தயிர்,மோர்,நெய் ஆகியவற்றை இன்றும் மக்கள் பயன்படுத்துவதால்,இன்றும் அத்தொழில் தொடர்கின்றது.
- ❖ மருதத்திணையின் தொழில் விவசாயம் ஆகும்.உணவில்லாமல் மக்கள் வாழ முடியாது,உணவு தரும். அத்தொழில் தொடர்கின்றது.
- ❖ நெய்தல் திணையின் தொழில் மீன் பிடித்தல்ஆகும் மீனைத் தொடர்ந்து மக்கள் பயன்படுத்துவதால், இன்றும் அத்தொழில் தொடர்கின்றது.
- ❖ காலம் மாறினாலும் பண்பாடு போல திணைத்தொழில்கள் தொடர்கின்றன.

**4.தமிழ் மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.**

- ❖ அரசு விழாக்களில் 'நீராருங் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைப் பாட ஏற்பாடு செய்தார்.
- ❖ தமிழ் வளர்ச்சித் துறை என்ற ஒரு தனித்துறையை உருவாக்கினார்.
- ❖ வள்ளுவர் கோட்டம், வள்ளுவர் சிலை ஆகியவற்றை அமைத்தார்.

**5.வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.**

- ❖ வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்தும்.
- ❖ நாமும் கருவி, காலம் ஆகியவற்றை அறிந்து செயல்களைச் செய்தல் வேண்டும்.
- ❖ நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும்.
- ❖ ஒரு செயலைச் செய்வதற்குரிய உலக நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

**6.பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

- ❖ அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் இல்லாமல்,அவர்களின் பாதுகாப்பு இல்லாமல்,வலிமை இல்லாமல் இருந்தால் எதிரிகளை நாம் எப்படிச் சமாளிப்போம்.
- ❖ துணிச்சல் இல்லாமல், எதையும் அறியாமல்,நல்லபண்பு இல்லாமல்,ஏழைக்கு உதவாமல் இருப்பவர் எளிதில் எதிரிகளைப் பெறுவார்கள்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**இயல் -7**

**2. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா.கவிபாடுகிறார்?**

- முதல் மழையால் நிலம் ஈரத்தால் பக்குவமானது.
- ஏரிலே காளைகளைப் பூட்டி, நிலத்தை உழுதனர்.
- ஊக்கத்துடனும், வலிமையுடனும் உழைத்தனர். நாற்று நட்டனர்.
- மேலும் மழை பொழிய நிலம் குளிர்ந்தது.
- நாற்றுகள் நிமிர்ந்து வளர்ந்தன.
- கிழக்கும் வெளுத்தது. கவலையும் மறந்தது.

**2.அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.**

**பொருத்தமான திணை :** வஞ்சித்திணை

**இலக்கணம்** :மண்ணாசையால் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போர் செய்வது வஞ்சித்திணையாகும்.

**விளக்கம்** : அவந்தி நாட்டுமன்னன், போர் புரிந்து மருத நாட்டை பிடிக்க நினைப்பதால், இது 'வஞ்சித்திணைக்குப்'பொருந்தி வருகிறது.

**3.'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' – இடஞ்சுட்டி பொருள் விளக்குக.**

**இடம்**

சிற்றகல் ஒளி என்னும் கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் விளக்கம்**

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் அம்மாநிலத் தலைவர்கள் விரும்பினர். அதனை எதிர்த்து ம.பொ.சி. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று ம.பொ.சி முழங்கினார்.

**4.பகர்வனர் திரிதரு நகரவீதியும்;**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்;**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்.**

அ)இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? **சிலப்பதிகாரம்**

ஆ)பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக. **பகர்வனர், பட்டினும்**

இ)எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக. **பட்டினும் மயிரினும், கட்டு நுண்வினை**

ஈ)காருகர் – பொருள் தருக. **நெய்பவர்**

உ)இப்பாடலடியில் காணப்படும் நறுமணப் பொருட்கள் யாவை? **சந்தனம்,அகில்.**

**5.பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.**

பேரரசனது மெய்ப்புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி,..........

**மையக்கருத்து:**

மெய்க்கீர்த்தி அரசனது புகழைக் கூறுவது.அரசனுடைய வெற்றிகளையும், வரலாறுகளையும் கூறுகின்றது. முதல் இராசராசனுடைய ஆட்சிக்காலத்தில் தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதில் அரசரின் புகழ் சொல்லப்படவில்லை. இதன் பின் வந்த மெய்க்கீர்த்திகள் அரசரின் பரம்பரையைச் சொல்கின்றன.

**இயல் -8**

**1.சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**

- வீரமற்றோர், சிறுவர், முதியோர் போன்றவரை எதிர்த்து போர் செய்யாமல் அன்று இருந்தனர்.
- அதை இன்றைய போர் நெறியிலும் கடை பிடிக்க வேண்டும்.
- மக்கள் உதவுதல்,அன்பு காட்டுதல்,இரக்கம்,தானம் செய்தல் முதலியவற்றை அன்று கடைபிடித்தனர்.
- நேர்மையான முறையில் அன்று தொழில்கள் நடத்தினர்.அதைப் போல நேர்மையாக இன்று தொழில் செய்ய வேண்டும்.
- அன்று ஏழைகளுக்குப் பணமும் உணவும் கொடுத்து மன்னன் காப்பாற்றினான்.அதைப் போல இன்று ஏழைகளைப் பணக்காரர்கள் காப்பாற்ற வேண்டும்.

**2.'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம் என்ற தலைப்பில்', பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

**(குறிப்பு: சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)**

உரைக்குறிப்புகள்:

சுற்றுச்சூழல் எது?
மாசினைத் தவிர்த்தல்.
மரம் நடுதல்
சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வு
மனிதன் மாற வேண்டும்.

**3. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.**

வாளித்தண்ணீர் எடுத்து தரையைச் சுத்தம் செய்ய வேண்டும்.தரை காய்ந்த பிறகு கந்தைத் துணியால் தரையைத் துடைக்க வேண்டும்.சாயக்குவளையில் உள்ள சாயத்தைக் கட்டைத்தூரிகை கொண்டு தரையில் கோலம் வரைய வேண்டும்.

**4.ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**

- ❖ அகவல் ஓசை பெற்று வரும்.
- ❖ ஈரசைச் சீர் மிகுதியாகவும் காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
- ❖ ஆசிரியத்தளை மிகுதியாக வரும்.
- ❖ மூன்றடி முதல் அமையும்.
- ❖ ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

**இயல் -9**

**1.ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என் அசோகமித்திரன் கூறுகிறார். – இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.**

கண்ணில்லாத பிச்சைக்காரனுக்கு இரண்டணாவை அவர் போட்டார். பிச்சைக்காரன் நீங்கபோற வழிக்கெல்லாம் புண்ணியம் என்று வாழ்த்தினான். தர்மம் செய்யாமல் இருந்திருந்தால் விபத்துக்குள்ளான இரயிலில்தான்சென்றிருப்பான். தர்மத்தால் உயிர் பிழைத்ததை தர்மம் செய்தவன் உணர்ந்தான். இவ்வாறு மாந்தர்களின் சிறப்புக் கூறுகளை ஜெயகாந்தன் கதையில் காட்டுகிறார்.

**2. சித்தாளின் மனச்சுமைகள்**
**செங்கற்கள் அறியாது – இடஞ்சுட்டிப் பொருள் கூறுக.**

**இடம் சுட்டல்:**

சித்தாளு கவிதையில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

சித்தாளின் துன்பங்களைச் செங்கற்கள் அறிவது இல்லை.

**விளக்கம்:**

சுமை சுமக்கும் சித்தாள்களின் மனச்சுமையைச் செங்கற்களும், கற்களும் அறியாது.

**3.எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

- ❖ உயிர் பிழைக்கும் வழி
- ❖ உறுப்புகள் இயங்காத இந்த உடலின் தன்மை.
- ❖ உணவைத் தேடும் வழி அறியேன்.
- ❖ காட்டில் செல்வதற்கான வழி

– ஆகியவற்றை அறியேன் என்று கருணையன் கூறுகிறார்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நெடு வினா விடை**

**இயல் -1**

**1)மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

- பூமிக்கு இந்தியா, முகமாகத் திகழ்கின்றது.
- அம்முகத்திற்குத் தென்திசை நாடுகள் நெற்றியாக உள்ளது.
- அந்நெற்றியில் பொட்டு போல தமிழகம்.
- தமிழகத்தின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வதுபோல் தமிழ்த்தாயும் எங்கும் புகழ்பெற்றவள்.

**அன்னை மொழியே!**

- அன்னை மொழியே! அழகான செந்தமிழே!பழமையான நறுங்கனியே!
- குமரிக்கண்டத்தை ஆண்டவளே! மண்ணுலகப் பேரரசே! பாண்டியனின் மகளே!
- திருக்குறளின் பெருமைக்குரியவளே!பாட்டும், தொகையும் ஆனவளே!
- கீழ்க்கணக்கே!சிலப்பதிகாரமே! மணிமேகலையே!
- தமிழே! உன்னைப் பணிந்து வாழ்த்துகின்றோம் – என்கின்றார்.

**2)தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.**

**தமிழின் சொல்வளம்**

- தமிழில் காணப்படக்கூடிய சொல் வளத்திற்கு இணையாக வேறு எந்த மொழியிலும் சொல்வளம் இல்லை.
- தாவரங்களின் அடி,காய்ந்த அடி,கிளை,இலை,கொழுந்து,பிஞ்சு, கெட்டுப்போன காய்கறி,பழத்தோல்,மணி, இளம் பயிர் ஆகிய வகைகள் மற்றும் பூவின் நிலைகள் எனப் பல வகையான சொற்கள் தமிழில் கொட்டிக் கிடக்கின்றது.
- காலத்திற்கு ஏற்ப புதிய சொற்களைத் தமிழில் உருவாக்க முடியும்.

**சொல்லாக்கத்திற்கான தேவை**

- இது கணினியின் காலம். அதற்கு தகுந்தாற்போல தமிழ்ச்சொற்கள் தேவைப்படுகின்றன.
- அறிவியல்,மருத்துவம்,பொறியியல் ஆகியவற்றில் காணப்படக்கூடிய பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட வேண்டும்.

– எனவே,தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.

**இயல் -2**

**1.மலர்ந்தும் மலராத பாதிமலர் போல**
**வளரும் விழி வண்ணமே – வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக விளைந்த கலை அன்னமே நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே – வளர் பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமே**
**– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.**

- ஆற்றில் காற்று விளையாடுகின்றது.
- கொடியில் காற்று தலைசீவுகின்றது.
- தென்றலில் காற்று நடக்கின்றது.
- அடடா!கவிஞர் கண்ணதாசனின் கற்பனை அழகாக உள்ளது.
- மலர்ந்தும் மலராத,விடிந்தும் விடியாத – அடடா! கவிஞர் கண்ணதாசனின் எதிர்ச்சொற்கள் அழகாக உள்ளது.
- இப்பாடலில் கவிஞர் கண்ணதாசன் பயன்படுத்திய உவமையணி அழகாக உள்ளது.
- மலர்ந்தும் மலராத ஆகிய சொல்லில் மோனை,எதுகை,முரண் ஆகியவற்றை கவிஞர் கண்ணதாசன் அழகாக அமைத்துள்ளார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2.முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியை விவரித்து எழுதுக.**

- ❖ பெருமழை பொழிகிறது.
- ❖ திருமால் பெரிய உருவம் எடுத்து நிற்பது போல மழைமேகம் உள்ளது.
- ❖ மேகம் கடலின் நீரைக் குடித்து பெரியதாக வருகின்றது.
- ❖ மலையைச் சுற்றி பெரிய மழை பெய்கிறது.
- ❖ முதுபெண்கள் ஊர்ப்பக்கம் சென்றனர்.
- ❖ முல்லைப் பூ,நெல் ஆகியவற்றைத் தெய்வத்தின் முன் தூவி, நற்சொல் கேட்பர்.
- ❖ இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது.
- ❖ இடைமகள் கண்டு,உன் தாய் வந்துவிடுவாள்.கவலைப்படாதே! என்றாள்.
- ❖ முதுபெண்கள் நற்சொல்லைக் கேட்டோம். தலைவன் வருவது உறுதி. கவலைப்படாதே!

**இயல் -3**

**1.உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**
**எங்கள் இல்லத்துக்கு வந்த உறவினரை,**

- ❖ வணக்கம்!வணக்கம்! என்று கூறி அவரை வரவேற்றேன்.
- ❖ அன்போடு வீட்டிற்குள்,வாருங்கள்!வாருங்கள்! என்று அழைத்தேன்.
- ❖ உட்காருங்கள் ஐயா என்று சொல்லி நாற்காலியில் அமர வைத்தேன்.
- ❖ முதலில் தண்ணீர் குடியுங்கள் என்றுச் சொல்லி,தண்ணீர் கொடுத்தேன்.
- ❖ பக்கத்தில் உட்கார்ந்து சிரித்த முகத்துடன் அவரிடம் பேசினேன்.
- ❖ உணவு உண்ண அவரை அன்போடு அழைத்தேன்.
- ❖ இலையில் இனிப்பு,அப்பளம்,வடை,பாயாசம் வைத்து,உணவிட்டேன்.
- ❖ நன்றி கூறி,அவருடன் தெரு வரை சென்று வழி அனுப்பினேன்.

**2.ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதைவிளக்குக.**

- ❖ ஆற்றுப்படுத்தல் என்றால் வழிகாட்டுதலாகும்.வழிகாட்டுவதும் ஒரு உதவி தான்.
- ❖ அன்றைய காலம் போலவே ,இன்றைய காலத்திலும் அன்னதானம் கிடைக்கும் இடங்களைப் பசியில் வாடுபவர்களுக்குத் தெரிவித்து வழிகாட்டுகின்றனர்.
- ❖ நோயில் வாடும் ஏழைகளுக்கு இலவச மருத்துவமனை உள்ள இடங்களை வழிகாட்டுகின்றனர்.
- ❖ மக்களுக்கு அரசின் உதவி கிடைக்க,இன்று பலர் வழிகாட்டுகின்றனர்.
- ❖ இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறித்த தகவல்களைக் கூறி இன்று பலர் வழிகாட்டுகின்றனர்.
- ❖ மேற்படிப்புக்கும் இன்று பலர் வழிகாட்டுகின்றனர்.
- ❖ கல்வி உதவித்தொகை பெறுவதற்கு இன்று பலர் வழிகாட்டுகின்றனர்.

**இயல் -4**

**1. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்காலவெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.**

**முன்னுரை**

செயற்கை நுண்ணறிவின் வெளிப்பாடுகள் எப்படி இருக்கும் என்பதைக் காண்போம்.

**செயற்கை நுண்ணறிவு**

- ❖ ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளும்.
- ❖ வெறும் வணிகத்துடன் நின்றுவிடாது.

செயற்கை நுண்ணறிவால் இயங்கும் வாகனங்கள்
செயற்கை நுண்ணறிவால் இயங்கும் இயந்திர மனிதன்.
செயற்கை நுண்ணறிவால் இயங்கும் மருத்துவமனை.
செயற்கை நுண்ணறிவால் இயங்கும் பள்ளிகள்
செயற்கை நுண்ணறிவால் இயங்கும் தொழிற்சாலைகள்
செயற்கை நுண்ணறிவால் இயங்கும் விமானங்கள் – ஆகியன எதிர்காலத்தில் வந்துவிடும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பயன்கள்**

- ❖ ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்து முடிக்கலாம்.
- ❖ காலம் வீணாவதைத் தடுக்க முடியும்.
- ❖ நமக்குத் தேவையான கதை,கட்டுரையை எழுதித் தரும்.
- ❖ கடினமான கணக்குகளை எளிமையாகப் புரிய வைக்கும்.
- ❖ புரியாத பாடங்களை எளிமையாகப் புரிய வைக்கும்.

– இவை எல்லாம் செயற்கை நுண்ணறிவால் எதிர்காலத்தில் ஏற்படும் பயன்கள் ஆகும்.

**முடிவுரை**

செயற்கை நுண்ணறிவின் வெளிப்பாடுகள் பற்றி அறிந்தோம்.

**2. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.**

**பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கி வரும் தமிழ் மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன.**

**சங்க இலக்கியமான பரிபாடலில்......**

- ❖ பூமி எவ்வாறு உருவானது என்பதைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது.
- ❖ உலகம் ஐம்பூதங்களால் உருவானது.
- ❖ வானம் என்னும் முதல் பூதங்கள் உருவாகின.
- ❖ பிறகு நிலம்,நீர்,காற்று,தீ ஆகிய பூதங்கள் உருவாகின.
- ❖ அணுக்களின் ஆற்றலால் மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.
- ❖ உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது,
- ❖ இப்படிப் பட்ட அறிவியல் உண்மையை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே நம் இலக்கியங்கள் கூறியுள்ளன.

இன்றைய அறிவியலுக்கு அன்றே வழி காட்டியவன் தமிழன் என்பதை நாம் அறியலாம்.

**இயல் -5**

**1.தமிழின் இலக்கிய வளம் கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிற துறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை. –மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.**

**செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை**

**முன்னுரை**

**செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை** பற்றிக் காண்போம்.

**மொழிபெயர்ப்பு**

- ➢ தமிழ் நூல்களைப் பிறமொழியில் மொழிபெயர்க்க வேண்டும்.
- ➢ பிறமொழி நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும்.
- ➢ இராமாயணம்,மகாபாரதம் ஆகியவை தமிழில் மொழிபெயர்க்கப்படுள்ளது.
- ➢ தாகூரின் நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பிறகு தான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.
- ➢ திருக்குறள் உலகில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- ➢ அறிவியல்,மருத்துவம்,பொறியியல்,கணிப்பொறி ஆகியவற்றில் உள்ள பல சொற்களை,இன்று நாம் தமிழாக்கம் செய்து பயன்படுத்துகின்றோம்.
- ➢ மொழிபெயர்ப்பால் எல்லா மொழியும் சிறக்கின்றது.
- ➢ அறிவியல் நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும்.
- ➢ கணித நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும்.

**முடிவுரை**

**செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை** பற்றிக் கண்டோம்

**2. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

- மன்னன், புலவர் இடைக்காடனார் பாடிய பாடலைக் கவனிக்காமல் அவமதித்தான்.
- புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
- புலவருக்காக இறைவன் மதுரையை விட்டு வேறு இடம் உள்ள கோயிலுக்குச் சென்றார்.
- மதுரையில் இறைவன் இல்லாததால்,மன்னன் கவலை அடைந்தான்.
- வேறு இடத்தில் இறைவன் இருப்பதை அறிந்தான்.
- மன்னன் அங்குச் சென்றான்.மன்னன் இறைவனிடம் முறையிட்டான்.
- இறைவன், புலவரின் பாடலை அவமதித்தது தான் குற்றம்.வேறு குற்றம் இல்லை என்றார்.
- தவறை உணர்ந்த மன்னன் புலவரிடம் மன்னிப்பு கேட்டு,அப்புலவனுக்குச் சிறப்பு செய்தார்.

**இயல் -6**

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.**

- பொம்மலாட்டம் நடத்தியவர்களுக்கு முதலில் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்
- பொம்மலாட்டக் கலை இன்று அழிந்து வருகின்றது.அதனை அழியாமல் காப்பாற்றி வரும் உங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
- நெகிழிப் பையின் தீமைகள் என்னும் தலைப்பில் பொம்மலாட்டம் நடத்தினீர்கள்.மிகவும் நன்றாக இருந்தது.பாராட்டுகள்!
- நெகிழியைப் பேயாகவும் பூதமாகவும் காட்டியது நன்றாக இருந்தது. பாராட்டுகள்!
- நெகிழியின் தீமையை உணர வைத்தீர்கள். பாராட்டுகள்!
- நெகிழி மக்காத குப்பை என்பதை உணர வைத்தீர்கள். பாராட்டுகள்.
- நெகிழியை மண்ணில் போடாதீர்கள்.அது நமக்கு ஆபத்து என்று கூறினீர்கள்.அருமை!
- மரம் வளர்ப்போம்.மழை பெறுவோம்.மரம் வரம் என்று சொன்னீர்கள். பாராட்டுகள்!
- நெகிழியைப் பயன்படுத்தமாட்டோம் என்று பொம்மைகள் உறுதிமொழி எடுத்தது.அருமை! பாராட்டுகள்!

**2. போராட்டக் கலைஞர் –பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக்கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**

**முன்னுரை**

பல திறமைகைளைக் கொண்டவர் கலைஞர் என்பதை,இக்கட்டுரையில் காணலாம்.

**போராட்டக் கலைஞர்**

- கலைஞர் படிக்கும் போதே, பனகல் அரசரின் சாதனை நூல் அவரின் போராட்டத்திற்கு ஆரம்பப்பாடமாக இருந்தது.
- வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம் என்ற பாடலைப் பாடி,இந்தித் திணிப்பை எதிர்த்து, மாணவர்களைத் திரட்டிப் போராட்டம் நடத்தினார்.

**பேச்சுக் கலைஞர்**

- 'நட்பு'என்னும் தலைப்பில்,கலைஞர் ஆற்றிய சொற்பொழிவு அனைவராலும் பாராட்டப்பட்டது.
- 'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி மாணவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி கொடுத்தார்.
- சென்ற இடத்தில் எல்லாம் தமிழ்,தமிழர்,தமிழ்நாடு பற்றியே பேசினார்.

**நாடகக் கலைஞர்**

- கலைஞர் எழுதிய முதல் நாடகம் பழநியப்பன்.வெள்ளிக்கிழமை,காகிதப்பூ எனப் பல நாடகங்களைக் எழுதினார்.
- தூக்குமேடை நாடகத்தில் நடித்தார்.அதற்காகக் **'கலைஞர்'** என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்.

**திரைக்கலைஞர்**

- நாம்,மலைக்கள்ளன்,பராசக்தி,ராஜாராணி,மனோகரா ஆகிய திரைப்படங்களுக்குக் கலைஞர் வசனங்களை எழுதினார்.
- பல திரைப்படங்களில் பாடல்களையும் கலைஞர் எழுதினார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**இயற்றமிழ்க் கலைஞர்**

- சந்தனக்கிண்ணம்,தாய்மை உள்ளிட்ட பல சிறுகதைகளைக் கலைஞர் எழுதினார்.
- பொன்னர் சங்கர்,தென்பாண்டிச்சிங்கம்,ஒரே ரத்தம் எனப் பல புதினங்களையும் எழுதினார்.
- தன் வாழ்க்கை வரலாற்றை நெஞ்சுக்கு நீதி என்னும் தலைப்பில் எழுதினார்.

**முடிவுரை**

பல திறமைகைளைக் கொண்டவர் கலைஞர் என்பதை,இக்கட்டுரையில் கண்டோம்.

**3.சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் நிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட.. இவ்வுரையைத் தொடர்க.

- கம்பன் அழகான பாடல் வரிகள் எழுதியுள்ளார்!
- கம்பன் அற்புதமான உவமைகளைக் கூறியுள்ளார்! கம்பன் வரிகள் சிறப்போ,சிறப்பு!
- பூந்தோட்டம்,பாக்கு மரம்,வயல் ஆகியவற்றைச் சுற்றி வருகிறது சரயு நதி என்று அழகாகச் சொல்கிறார்.
- கம்பன் இயற்கையை அழகாகப் பாடலில் காட்டுகின்றார்.
- மயிலும் மலரும் தாமரையும் பற்றி கம்பரின் வரிகள்..என்னே! அழகு.
- இராமனின் நிறம் மையோ?மரகதமோ? கடலோ?மேகமோ?என்று எப்படி எல்லாம் வருணிக்கிறார்.
- குகன் புலம்புவதும் கும்பகர்ணன் எழுவதும் பற்றி கம்பர் உரைப்பது. வேறு யாருக்கும் வாராது.
- கம்பன் கவிதைகளின் கொம்பன் என்று தான் சொல்ல வேண்டும்.

**இயல் -7**

**1.நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்'என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.**

**'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்'**

- அனைவருக்கும் வணக்கம்! 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்னும் தலைப்பில் உங்கள் முன் பேச வந்துள்ளேன்.
- சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய விழாக்களைக் கொண்டாடும்போது நம் விடுதலைக்காகப் பாடுபட்ட நாட்டுத் தலைவர்களை நினைத்துப்பார்க்க வேண்டும்.
- ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு நாம் அடிமையாய் இருந்தோம்.மகாத்மா காந்தி,நேரு, பெரியார் போன்ற தலைவர்கள் நம் நாட்டு விடுதலைக்காகப் போரடினார்கள்.
- அத்தகைய தலைவர்களை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நாட்டுப்பற்றுடன் இருக்க வேண்டும்.
- மாணவப் பருவத்தில் நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர்படை ஆகியவற்றில் இணைந்து நாட்டுக்கு உழைக்க வேண்டும்.
- மரம் நடுவது,சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைப்பதும் நாட்டுப்பற்று தான்!
- இன்றைய மாணவர்கள்!நாளைய இந்தியாவை ஆளப்போகும் தலைவர்கள்!
- நாட்டிற்காகத் தொண்டு செய்வோம் எனக் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.நன்றி!வணக்கம்!

**4.பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.**

- யானைகள் பிடிக்கப்படும், மக்கள் பிணைக்கப் படுவதில்லை.
- சிலம்பு புலம்பும், மக்கள் புலம்ப மாட்டார்.
- ஓடைகள் கலங்கும், மக்கள் கலங்க மாட்டார்.
- மாங்காய் வடுப்படும் மக்கள் வடுப்படுவதில்லை.
- மலர் பறிப்பர். மக்கள் உரிமையை பறிக்க மாட்டார்.
- காட்டில் கொடிய விலங்கு உண்டு, மக்களில் கொடியவர் இல்லை.
- வண்டு கள் உண்ணும், மக்கள் கள் உண்பதில்லை.
- மூங்கிலில் வெறுமை உண்டு,மக்களில் வெறுமை இல்லை.

- ❖ வயலில் வைக்கோல் போர் உண்டு,நாட்டில் போர் இல்லை.
- ❖ மலையில் இருள் உண்டு.நாட்டில் வறுமை இல்லை.
- ❖ மான் மருளும், கண் மருளாது.
- ❖ தெய்வம்,தாய்,தந்தை,மகன் ஆகியவையாக இருக்கிறான் இராசராச சோழன்.

**5.சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.**

- மருவூர்ப் பாக்கத்தில் தனித்தனி கடைகள் இருந்தன.இன்று ஒரே கடையில் அனைத்தும் விற்கப்படுகின்றன.
- மருவூர்ப் பாக்கத்தில் வண்ணக்குழம்பு, சந்தனம் ஆகியவை விற்கப்பட்டன.
- அவை அனைத்தும் இயற்கையானவை.
- ஆனால், இன்று வணிக வளாகங்களிலும் அங்காடிகளிலும் செயற்கைப் பூக்களும் சந்தனங்களும் விற்கப்படுகின்றன.
- தங்கம், முத்து, பவளம் ஆகியவை மருவூர்ப்பாக்கம் வீதிகளில் விற்கப்பட்டன. ,
- இன்று நகைக்கடைகளில் தங்கமும் முத்தும் பவளமும் விற்கப்படுகின்றன.
- மருவூர்ப் பாக்கத்தில் உள்ள கடைகளில் அனைத்து பொருட்களும் விலை குறைவு.
- இன்று கடைகளில் அனைத்துப்பொருட்களும் விலை அதிகம்.

**இயல் -8**

**1.காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**
**"கவிஞன் யானோர் காலக் கணிதம் ...... .....**

- ❖ கருப்பட – உருப்பட, அவனும் – நானும், அழிந்தவை –அறிக ஆகியவை சொல் நயத்துடன் இருக்கிறது.
- ❖ ஆக்கல், அழித்தல் ஆகிய சொற்களில் கண்ணதாசன் முரண்களை அழகாகப் பயன்படுத்தி இருக்கின்றார்.
- ❖ இவை – இவை என்ற மோனையும் இனிமை. கவிஞன் – புவியில் என்ற எதுகையும் இனிமை.
- ❖ உருவக அணி கவிதையில் வந்துள்ளது சிறப்பு. காலத்தைக் கணிதமாக உருவகித்திருப்பது மிகவும் சிறப்பு.
- ❖ பெருமிதச் சுவை கவிதையில் உள்ளது.
- ❖ ஆசிரியப்பாவில் கவிதை அமைந்துள்ளது.
- ❖ இனிய சந்தத்தில் பாடும் வகையில் பாடல் அமைந்துள்ளது.

**இயல் -9**

**1..ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.**

சுவரொட்டி

**சிற்பி வார இதழின் ஜெயகாந்தன் சிறப்பிதழ்**

**உள்ளே.....**

- ★ ஜெயகாந்தனின் பாதை
- ★ ஜெயகாந்தனின் வெற்றி
- ★ ஜெயகாந்தனின் அறிவுரை
- ★ ஜெயகாந்தனின் சிந்தனை
- ★ ஜெயகாந்தனின் படைப்புகள்

**விலை ரூ.50 மட்டுமே! முன்பதிவு செய்வீர்**

**முன்பதிவுக்கு..**
**சிற்பி வார இதழ்**
**தமிழ் நகர்,**
**ஈரோடு-2**

**2. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.**

- கருணையன் தாய் இறந்தார்.
- பூமித்தாயே! அன்னையைக் காப்பாயாக என்று சொல்லி குழியில் மலர்களைத் துவினான்.
- தாயின் உடலை மண்ணில் இட்டு மலர்களையும் கண்ணீர் பொழிந்தான்.
- பயிர் காய்ந்தது போல நானும் தாய் இல்லாமல் காய்ந்து இருக்கிறேன்.
- தீயையும் நெஞ்சையும் தேய்த்த அம்புகளால் துளைத்தது போல வேதனை அடைகிறேன்.
- காட்டில் வழி தெரியாமல் அழுது வாடுகிறேன்.

**விரிவானம்**

**1.உரைநடையின் அணிநலன்கள்**

**ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

**சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.**

பங்குபெறுவோர் – பாரதி, உறவினர் மகள்(மேரி)

மேரி : வணக்கம் ஐயா.
பாரதி : வணக்கம்.மேரி
மேரி : தமிழ் மொழி எப்போது தோன்றியது ஐயா!
பாரதி : தமிழ் மொழி பழமையானது.எப்போது தோன்றியது என்று கண்டுபிடிக்க முடிததது?
மேரி : உரைநடை என்றால் என்ன?
பாரதி :தமிழ் இலக்கிய வகையில் ஒன்று உரைநடை.பேசுவதையே எழுதுவது உரைநடை.
மேரி : உரைநடை எப்படி இருக்கும்?
பாரதி : செய்யுள் போல கடினமாக இல்லாமல்,எளிமையாகப் புரியும் படி இருக்கும்.
மேரி : உரைநடையின் சிறப்பு பற்றிக் கூறுங்கள்.
பாரதி : செய்யுள் போல எதுகை,மோனை உரைநடைக்குத் தேவையில்லை.ஆனால் உவமை,உருவகம்,அணி ஆகியவை உரைநடையில் அழகாக இடம்பெறும்.
மேரி : உரைநடை எழுதிய சிலரது பெயரைக் கூறுங்கள்.
பாரதி : கூறுகிறேன்.பாரதியார்,மு.வ,திரு.வி.க,அண்ணா ஆகியோர் சிறந்த உரைநடை எழுத்தாளர்கள்.
மேரி : உரைநடை பற்றி நன்கு அறிந்து கொண்டேன்.மிக்க நன்றி ஐயா!
பாரதி : நன்றி.

**2.புயலிலே ஒரு தோணி**

**1.புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?**

**முன்னுரை:**

புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டைக் காண்போம்.

**புயலிலே ஒரு தோணி**

- கடலில் தோணி ஒன்று சென்று கொண்டு இருந்தது.
- அப்போது வெயில் வேகமாக மறைந்துவிட்டது. வானம் இருட்டானது.
- இடி மின்னல் வானத்தைப் பிளந்தது. வானம் உடைந்தது.
- வெள்ளம் கொட்டியது.சூறாவளி அடித்தது.வானத்துடன் கடல் கலந்துவிட்டது.
- பயங்கர மழை...பேய் மழை பெய்தது.
- தோணி கடலில் மிகவும் தடுமாறியது.
- புயல் காற்றின் சத்தம் காதைப் பிளந்தது.
- வானம் பிளந்து நெருப்பைக் கக்கியது.தோணி தாவி தாவி குதிகுதித்தது.
- தோணி சாய்வது போல சாய்ந்து...சாய்ந்து.. ஆடியது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



- நொறுநொறு என்று நொறுங்கியது.
- தாவி விழுந்தது, சுழல்கின்றது.
- கடலில் சிலுசிலு மரமரப்பு, புய்ங் என இடிஇடிக்க சீனப் பிசாசுகள் தாவுகின்றன.

**முடிவுரை**

புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டைக் அறிந்தோம்.

## 3.கோபல்லபுரத்து மக்கள்

**அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.**

**முன்னுரை :**

அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை இக்கதையில் காண்போம்.

**அன்னமய்யா**

- காட்டு வேலைக்கு அன்னமய்யா ஒரு ஆளை அழைத்து வந்தார்.
- அவன் சன்யாசி போல இருந்தான்.
- அவன் ஒரு வாலிபன்.முகத்தில் தாடி வைத்திருந்தான்.அவன் தோற்றம் முதியவரைப் போல காட்டியது.
- அவனுக்கு மிகவும் தாகம் அடித்தது.அதானல்,அவன் அன்னமய்யாவிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டான்.
- அதற்கு அன்னமய்யா,தான் வைத்திருந்த நீச்சுத் தண்ணியைக் கொடுத்தார்.
- வாலிபன் அதை நன்கு குடித்தான்.பிறகு சோற்றின் கஞ்சியையும் கொடுத்தார் அன்னமய்யா.

**அன்னம் கொடுத்த ஐயா**

- வாலிபன் உற்சாகம் அடைந்தான்.
- வாலிபன் வேப்ப மர நிழலில் நன்றாகத் தூங்கினான்.
- குழந்தையைப் போலவே அவ்வாலிபனைப் பார்த்தார்.
- தூங்கி எழுந்த வாலிபன் ‘உன் பெயர் என்ன? என்று கேட்க, அன்னமய்யா என்றான்.
- அன்னம் கொடுத்த ஐயா உண்மையில் அன்னமய்யா தான் என்று நினைத்தான்.
- அன்னமய்யா அந்த வாலிபனின் பெயரைக் கேட்க, பரமேஸ்வரன் தற்போது மணி என்றான்.
- கம்மஞ்சோறும் துவையலும் உண்டு உறங்கினான்.

**முடிவுரை**

அன்னம் தந்ததால் அன்னத்திற்கே, அவர் ஐயா அன்னமய்யா.

## 4.விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

**அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்று எழுதுக.**

**முன்னுரை**

அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்றினைக் காண்போம்.

**விண்வெளிப் பயணம்**

- நானும், எம் வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரோடு ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளி பயணம் சென்றோம்.
- புதிய இயந்திரத்தில் எங்களை அவர் வானத்திற்கு அழைத்துச் சென்றார்.
- வானத்தில் மேகக் கூட்டங்கள் அழகாக சென்று கொண்டு இருந்தன.
- மேகங்கள் பனிக்கட்டி போல இருந்தது.
- வானத்தில் வண்ணம் அடித்து போல நீலவானம் இருந்தது.
- நட்சத்திரங்கள் அழகாக மின்னியது.
- நிலாவும் சூரியனும் எதிர் எதிரில் நின்று கொண்டு இருந்தன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- வானத்திலிருந்து பூமியைப் பார்க்கும் போது பூமி சிறிய உருண்டை போல இருந்தது.
- மழை வரும் போல் இருந்ததால்,நாங்கள் மீண்டும் பூமிக்கு வந்த விட்டோம்.

**முடிவுரை**

அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்றினைக் காண்டோம்.

**5.புதிய நம்பிக்கை**

**1. கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே – என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.**

**முன்னுரை**

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே – என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைக் காண்போம்.

**மேரியின் குடும்பம்**

- மேரி கருப்பு இனத்தில் பிறந்த பெண்.
- கருப்பு இனத்தில் உள்ளவர்களுக்கு அன்றைய காலத்தில் படிப்பதற்கு வழி இல்லை.
- மேரியின் குடும்பம் கல்வி அறிவில்லாத குடும்பம்.
- அவர்களின் குடும்பமே பருத்திக் காட்டில் வேலை செய்கின்றது.

**மேரியின் ஆசை**

- வில்சன் என்பவரின் வீட்டிற்குத் தன் தாயுடன் மேரி ஒருமுறை செல்கின்றாள்.
- அங்குப் புத்தகங்கள் இருந்ததை மேரி பார்க்கின்றாள்.
- ஒருபுத்தகத்தை எடுத்துப் புரட்டுகின்றாள்.
- வில்சனின் மகள் புத்தகத்தைப் பிடுங்கி,உன்னால் படிக்க முடியாது என்றாள்.
- இதை நினைத்து மேரி கண்ணீர் வடித்தாள்.
- தன் தந்தையிடம் மேரி,எனக்குப் படிக்க ஆசையாக உள்ளது என்றாள்.
- நாம் கருப்பு இனத்தவர்,ஆங்கிலேயர் பள்ளியில் சேர்க்க மாட்டார்கள் என்றார்.

**மேரியின் கல்வி**

- அறிமுகம் இல்லாத பெண் ஒருவர் மேரிக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுக்கின்றார்.
- வெள்ளைக்காரப் பெண்மணி,ஒரு கருப்பு இனப்பெண்மணிக்கு படிக்க பணம் தருகின்றார்.
- அதை வில்சன்,மேரிக்குப் பெற்றுத் தருகின்றார்.நகரத்திற்குச் சென்று மேரி படித்து உயர்கின்றாள்.

**முடிவுரை**

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே – என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைக் கண்டோம்.

**7.மங்கையராய்ப் பிறப்பதற்கே..**

**1.நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.**

**மகளிர் நாள் விழா**

**இடம் : பள்ளிக் கலையரங்கம்.** **நாள் : 08.03.2023**

**கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.**

- 08.03.2023 அன்று பள்ளிக் கலையரங்கத்தில் மகளிர் நாள் விழா நடைபெற்றது.
- முதலில் பள்ளித் தலைமையாசிரியர் வரவேற்றார்.
- ஆங்கிலஆசிரியர் சுதா,தமிழாசிரியர் திருமதி.பாத்திமா ஆகியோர் மகளிர்நாள்விழா வாழ்த்துகளைக் கூறினார்.
- இதழாளர் கலையரசி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.
- மகளிர் நாள் விழாப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளைச் சிறப்பு விருந்தினர் வழங்கினார்.
- விழா இறுதியில் மாணவத் தலைவர் வளர்மதி நன்றியுரை வழங்க, நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

**8.இராமானுசர்(நாடகம்)**

**1.குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.**

மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.

**முகில்** : வணக்கம் ஐயா!

**ஆசிரியர்** : வணக்கம்! இன்றைய பாடம் முன்னேற்றம். கொக்கைப் போல வாய்ப்பு வரும் வரை காத்திருக்க வேண்டும். வாய்ப்பு வந்தவுடன் பயன்படுத்த வேண்டும்.

**முகில்** : ஐயா! சிந்திக்காமல் செயல்படக் கூடாது என்கிறது இவ்வரிகள்.

**ஆசிரியர்** : கோழி, குப்பையைக் கிளறினாலும் தனக்குத் தேவையான 'உணவை மட்டுமே' கொத்தித் தின்னும். அதுபோல எந்தச் செயலிலும் நல்லதை மட்டே எடுத்துக்கொள்ள வேண்டும்.

**முகில்** : புரிந்தது ஐயா.

**ஆசிரியர்**: அடுத்தது..உப்பைக் கண்ணால் பார்க்கலாம். சுவையை நாவில் உணரலாம். அதுபோல வெளித்தோற்றம் எப்படியிருப்பினும், குணநலன்களை ஆராய்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். .
நாமும் மற்றவர்களிடம் ஒவ்வொருவரின் குறைவானாலும் அளவோடுஇருப்போம்.

**முகில்** : மிக்க மகிழ்ச்சி ஐயா! வாழ்க்கைப் பாடத்தைப் புரிந்து கொண்டோம் நன்றி! ஐயா!

**9.ஒருவன் இருக்கிறான்**

**1.அழகிரிசாமியின்'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.**

**முன்னுரை**

கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் வீரப்பன். அவரைப்பற்றி இனி காண்போம்.

**வீரப்பன்**

- வீரப்பன் சைக்கிள் கடையில் கூலி வேலை செய்து வந்தார்.
- அவர் மிகவும் ஏழை. அவரின் நண்பன் குப்புசாமி.
- அனாதையான குப்புசாமிக்கு வறுமையையும் பொருட்படுத்தாமல் வீரப்பன் உதவுகிறார்.
- குப்புசாமிக்கு நோய் வந்தது. அதனால் வேலைக்குப் போக முடியவில்லை.
- வீரப்பன் அவரை தன் வீட்டிற்கு அழைத்து வந்து உணவு கொடுத்தார்.
- கடன் வாங்கி குப்புசாமிக்குக் கொடுப்பார்.

**இணைபிரியா நட்பு**

- வீரப்பன் குப்புசாமிக்காக் கோயிலுக்குச் சென்று வேண்டுகிறார்.
- வேலை இல்லாதபோதும் நண்பனுக்காக மூன்று ரூபாய் கடன் வாங்கி சென்னைக்குச் செல்லும் ஆறுமுகத்திடம் கொடுத்து அனுப்புகிறார்.
- குப்புசாமியைப் பார்க்க வரலாம் என்றால், இந்த மூன்று ரூபாய் பேருந்துக்கு செலவாகிவிடும் என்பதால் தான் கொடுத்தனுப்புகிறேன்.
- நண்பனைப் பார்க்க விரைவாக வருவதாகவும் வீரப்பன் கடிதத்தில் தெரிவித்தார்.

**முடிவுரை**

உதவுவதற்கும் அன்பு செலுத்துவதற்கும் ஒருவன் இருக்கிறான், அவன் தான் வீரப்பன் போன்ற நண்பர்கள் என்பதை இக்கதை மூலம் அறியமுடிகின்றது.

**பொதுக் கட்டுரை**

**1.சான்றோர் வளர்த்த தமிழ்**

**முன்னுரை**

சான்றோர் பலர் தமிழை வளர்த்தனர்.அவர்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சங்கத்தமிழ்**

- கி.பி இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் தோன்றிய இலக்கியம் சங்க இலக்கியம் ஆகும்.
- பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியம் ஆகும்.கபிலர், அவ்வையார் முதலியோர் சங்கத் தமிழை வளர்த்தனர்.

**அற இலக்கியம்**

- ஒழுக்க நெறிகளை அற இலக்கியங்கள் உணர்த்தின. திருவள்ளுவர், சமணமுனிவர்கள் முதலிய பல புலவர்கள் அற இலக்கியங்களை வளர்த்தனர்.
- திருக்குறள் உலகம் முழுதும் போற்றப்படுகின்றது.

**சிற்றிலக்கியம்**

- சிற்றிலக்கியம் 96 வகைப்படும்.
- பரணி,சதகம், பிள்ளைத்தமிழ் ஆகியன சிற்றிலக்கிய நூல்கள் ஆகும்.
- ஒட்டக்கூத்தர்,குமரகுருபரர்,செயங்கொண்டார் சிற்றிலக்கியத தமிழை வளர்த்தனர்.

**சமயம்**

- சைவம்
- வைணவம்
- கிறித்தவம்
- இஸ்லாம் – ஆகிய சமயங்கள் பலவும் சமய தமிழை வளர்த்தன.

திருநாவுக்கரசர்,ஆண்டாள், வீரமாமுனிவர், உமறுப்புலவர் ஆகியோர் சமயத் தமிழை வளர்த்தனர்.

**முடிவுரை**

அன்று முதல் இன்றுவரை தமிழ் இலக்கியங்களைச் சான்றோர் பலர் வளர்த்து வந்துள்ளனர் என்பதை அறியலாம்.

## 2.விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்

**முன்னுரை :**

விண்வெளியில் பறந்த பெண்மணி கல்பனா சாவ்லா. அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இளமை**

- ஹரியானா மாநிலத்தில் பிறந்தார்.
- பஞ்சாபிக் குடும்பத்தைச் சார்ந்தவர்.
- இவருக்கு இருசகோதரிகளும் ஒரு சகோதரனும் இருக்கின்றனர்.
- அரசுப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைக் கற்றார்.
- விண்வெளித் துறையில் இளநிலை முதல்
- முனைவர் பட்டம் வரைப் படித்தார்.

**வான்வழிப் பயணம்**

- நாசாவில் துணைத்தலைவராக பொறுப்பேற்றார்.
- 1997 ஆம் ஆண்டு முதல் விண்வெளி பயணத்தைத் தொடங்கினார்.
- 372 மணி நேரம் விண்வெளியிலேயே இருந்து சாதனை படைத்தார்.

**கொலம்பியா விண்கல நிகழ்வு**

கொலம்பியா விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.இதில் கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேர் பயணித்தனர். 16 நாட்கள் ஆய்வை முடித்து திரும்பிய போது,விண்கலம் வெடித்துச் சிதறியது.பயணம் செய்த அனைவரும் இறந்தனர்.

**முடிவுரை**

கல்பனா சாவ்லாவின் இறப்பு பேரிழப்பாகும். அவர் நினைவைப் போற்றுவோம்

## 3.உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

**முன்னுரை**

எங்கள் ஊரில் கடந்த வாரம் நான் அரசுப் பொருட்காட்சி சென்றேன்.அதனை கட்டுரையாக எழுதுகின்றேன்.

**பொருட்காட்சி**

- ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் எங்கள் ஊரில் அரசுப்பொருட்காட்சி வைப்பார்கள்.வண்ண ஓவியங்களால் வரவேற்கும் வண்ணம் அழகாக இருந்தது.கடைகள் பலவற்றில் பொருட்கள் மிகுதியாக இருந்தது.
- பொருட்காட்சிக்குள் செல்ல பத்து ரூபாய் நுழைவுச் சீட்டு வாங்கிச்சென்றோம்.நுழைவு அரண்மனை

- நுழைவுவாயில் போல இருந்தது.திருவள்ளுவர்சிலை அனைவரையும் வரவேற்பது போலஅங்கு இருந்தது.
- நூல்கள் விற்கும் கடைகள் பல இருந்தது. ஆதற்குள் சென்றேன். அண்ணா,அப்துல் கலாம்,பாரதியார் ஆகியோரின் புத்தகங்கள் வாங்கினேன.
- சுற்றுப்புறத் தூய்மை,மழைநீர் சேமிப்பு ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வு படங்கள் இருந்தன.
- விளையாட்டு அரங்கம். இதில் 25 விளையாட்டுகள் இருந்தன. துப்பாக்கி சுடுதல்,ராட்டினம்,குதிரை வண்டி, நீர்ச்சருக்கு என பல விளையாட்டுகள் இருந்தன.
- உணவுஅரங்கம். இதில் 25 கடைகள் இருந்தன.சோளக் கருது, பனங்கிழங்கு,பஞ்சு மிட்டாய்,கம்மங்கூழ் முதலிய தமிழர் உணவுகள் விற்கப்பட்டன.மீன்,கறி போன்றவையும் விற்கப்பட்டன.

**முடிவுரை**

மிகவும் சிறப்பான பொருட்காட்சி, அரசுபொருட்காட்சி என்பதால் அனைத்தும் குறைந்த விலையில் ஏழைகளுக்குத் தகுந்தது போல இருந்தது.

4.உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக்கட்டுரையாக்குக.

**தலைப்பு : கலைத் திருவிழா**

**முன்னுரை**

எங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையில் காண்போம்.

**கலைத் திருவிழா**

- கலைகளைக் கொண்டாடும் திருவிழா கலைத்திருவிழா ஆகும்.
- எங்கள் ஊரில் கலைத்திருவிழா பாரதி மண்டபத்தில் நடைபெற்றது.அங்கு நானும் என் நண்பர்களும் சென்றோம்.
- நுழைவு வாசலில் ஓவியங்கள்,சிலைகள், வாழைமரம்,தோரணங்கள் ஆகியவை இருந்தன.அதனைக் கடந்து அரங்கம் நோக்கி நடந்தோம்.

**கலைகள்**

- கரகாட்டம்,பொய்க்கால் குதிரையாட்டம்,காவடியாட்டம்,புலியாட்டம்,மரக்கால் ஆட்டம், பறையாட்டம்,மயிலாட்டம்,ஒயிலாட்டம்,தெருக்கூத்து எனப் பல்வேறு வகையான கலைகள் மேடைகளில் ஆடிக்காட்டினர்.

**கலைஞர்கள்**

- தலையில் செம்பினை வைத்துக் கரகாட்டம் ஆடினர்.
- குதிரை வடிவக்கூண்டுக்குள் நின்று பொய்க்கால் குதிரையாட்டம் ஆடினர்.
- காவடி தூக்கிக் கொண்டு காவடி ஆட்டம் ஆடினர்.
- புலி வேடம் அணிந்து புலி ஆட்டம் ஆடினர்.
- மயில் வேடம் அணிந்து மயிலாட்டம் ஆடினர்.

**பிற கலைகள்**

- கட்டிடக் கலை,
- ஓவியக் கலை,
- விளையாட்டுக் கலை

-என அனைத்துக் கலைகளும் கலைத் திருவிழாவில் இருந்தது.அனைத்துக் கலைகளின் படைப்புகள் அங்கே,மலை போல் இருந்தன.

**இசையும் உணவும்**

- அனைத்து வகையான இசைக்கருவிகள் இருந்தன.அதனைப் பார்த்து வியந்து போனோம்.
- ஒவ்வொரு கருவியிலும் இசையினை வாசித்தனர்.இனிமையாக இருந்தது.
- கூழ்,சோளக்கருது,ராகி வடை ஆகிய பாரம்பரிய உணவுகள் இருந்தன.
- அதனை வாங்கி உண்டோம்.அருமையாக இருந்தது.

**முடிவுரை**

**"கலைத் திருவிழா... கலைத் திருவிழா**

**கண்களின் திருவிழா...கண்களின் திருவிழா.."**

கலைத்திருவிழாவிற்குச் செல்வோம்!நாமும் ஏதாவது ஒரு கலையைக் கற்று,அதனை அழியாமல் பாதுகாப்போம்.

**கடிதம்**

**வாழ்த்துமடல் எழுதுக.**

**1. மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

12,தமிழ் நகர்,
இஇஇ மாவட்டம்.
நாள்:

**அன்புள்ள நண்பனுக்கு,**

உன் உயிர் நண்பன் எழுதும் மடல். நானும் என்குடும்பமும் நலம்.அதுபோல நீயும் உன் குடும்பமும் நலமா? மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் பங்குகொண்டு நீ முதல்பரிசு பெற்றதை அறிந்தேன்.மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.உன் வெற்றி! என்வெற்றி! பள்ளிக்கு உன்னால்பெருமை நண்பா!மேலும் பல போட்டிகளில் கலந்து கொண்டு சாதனைபடைக்க வாழ்த்துகின்றேன்.அடுத்த வாரம் ஊருக்கு வரும்போது உன்னைப் பார்க்கிறேன்.

**இப்படிக்கு,**
**இணைபிரியா நண்பன்,**
அஅஅ

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
மு.முகில்
35,பாரதி வீதி,
சென்னை-5

**2.உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்**
அஅஅ,
10,பூமி நகர்,
இஇஇ.

**பெறுநர்**
உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
இஇஇ.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**மதிப்பிற்குரிய ஐயா,**

**பொருள்:** உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுத்தல் – தொடர்பாக.

**வணக்கம்.** இன்று காலை முருகன் உணவு விடுதிக்குச் சென்றேன். உணவு உண்டேன். உணவு கெட்டுப் போய் இருந்தது.உணவு விடுதி முதலாளி விலைப்பட்டியலில் உள்ளதை விட கூடுதலாக பணம் வாங்கினார். எனவே, அந்த உணவகத்தின் மீது .நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உரிய சான்றுகள் இணைக்கப்பட்டுள்ளன. **நன்றி!**

**இப்படிக்கு,**

**நாள்** **தங்கள் உண்மையுள்ள,**

**இஇஇ.** **அஅஅ**

**உறைமேல் முகவரி:**

**பெறுநர்**

உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
இஇஇ

**3.மதிப்புரை எழுதுக.**

**பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை /சிறுகதை /கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

**(குறிப்பு : நூலின் தலைப்பு – நூலின் மையப் பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து –நூலின் நயம் – நூல் கட்டமைப்பு –சிறப்புக் கூறு –நூல் ஆசிரியர்)**

**நூலின் தலைப்பு**

நீதிக் கதைகள்

**நூலின் மையப் பொருள்**

மனித வாழ்க்கைக்குத் தேவையான அன்பு,அருள்,பொறுமை,இரக்கம் ஆகிய நீதிகளை இந்த நூல் கூறுகின்றது.

**மொழிநடை**

படிக்காத மக்கள் கூடப் புரிந்து கொள்ளும் படி இந்த நூல் அமைக்கப்பட்டுள்ளது. தெளிந்த நீர் போல மொழிநடையை ஆசிரியர் அமைத்துள்ளார்.

**வெளிப்படுத்தும் கருத்து**

நேர்மையாக கடின உழைப்புடன் எந்தச் செயலையும் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதே இக்கதை வெளிப்படுத்தும் கருத்து ஆகும்.

**நூலின் நயம்**

கரும்பின் சுவை போல ஒவ்வொரு கதையும் இனிக்கின்றது.எதுகை மோனையும் கூட கதையில் வருகின்றது.

**நூல் கட்டமைப்பு**

- 100 பக்கங்கள் இந்நூலில் உள்ளன.
- 10 தலைப்பில் கதைகள் உள்ளன.
- ஒவ்வொரு கதையும் பத்துப் பக்கங்கள் உள்ளன.

**சிறப்புக் கூறு**

- நாம் முன்னேறத் தேவையானவை தன்னம்பிக்கை,முயற்சி, துணிவு மட்டுமே! என்பதை எல்லாக் கதையிலும் கூறியுள்ளது .
- ஒவ்வொரு கதைத் தொடங்கும் போதும் ஒரு திருக்குறள் உள்ளது.

ஆகியவை இந்நூலின் சிறப்பு ஆகும்.

**நூல் ஆசிரியர்**

இந்நூலின் ஆசிரியர் திரு.மணி அவர்கள்.அவர் சென்னையைச் சேர்ந்தவர்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4.'பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்' – குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.**

**அனுப்புநர்**

10ஆம் வகுப்பு மாணவர்கள்,
ஆஆஆ உயர்நிலைப்பள்ளி,
இஇஇ.

**பெறுநர்**

தலைமையாசிரியர் அவர்கள்,
ஆஆஆ உயர்நிலைப்பள்ளி,
இஇஇ.

**மதிப்புக்குரிய ஐயா,**

**பொருள்:** செயல் திட்ட வரைவு ஒப்புதல் வழங்கி செயல்படுத்த வேண்டுதல் – சார்பாக.

வணக்கம். கடந்த ஓராண்டு பள்ளி வளாகத்தைத் தூய்மைப்படுத்தி வருகின்றோம்.அது குறித்த நடவடிக்கைகளை செயல்திட்டமாகத் தயாரித்து தங்கள் பார்வைக்கு அனுப்பி உள்ளோம். அதற்கு ஒப்புதல் வழங்கிட பணிவுடன் வேண்டுகிறோம். நன்றி

**இடம்: இஇஇ** **இப்படிக்கு,**
**நாள்** **ஆஆஆ உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்.**

**உறைமேல் முகவரி:**

**பெறுநர்**

தலைமையாசிரியர் அவர்கள்,
ஆஆஆ உயர்நிலைப்பள்ளி,
இஇஇ.

**5.நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்**

அஅஅ,
23,கம்பர் வீதி,
இஇஇ.

**பெறுநர்**

ஆசிரியர்,
'தினத்தந்தி' நாளிதழ்,
சேலம்

**பொருள்:** கட்டுரை வெளியிட வேண்டுதல் – தொடர்பாக.

**மதிப்பிற்குரிய ஐயா,**

பொங்கல் பண்டிகையை ஒட்டி வெளியிடும் பொங்கல் மலருக்காக உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளேன். அக்கட்டுரையை அனுப்பியுள்ளேன். தாங்கள் அக்கட்டுரையைப்பொங்கல் சிறப்பு மலரில் வெளியிடுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி!

**இடம் : இ இ இ** **இப்படிக்கு,**
**நாள் :** **தங்கள் உண்மையுள்ள,**
அஅஅ.

**உறைமேல் முகவரி:**

**பெறுநர்**

ஆசிரியர்,
'தினத்தந்தி' நாளிதழ்,
இஇஇ.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6.பள்ளித் திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**உறவினருக்குக் கடிதம்**

25, ஔவையார் நகர்,
நாள்----

**அன்புள்ள அத்தைக்கு,**

தங்கள் அன்பு அண்ணன் மகன் எழுதும் கடிதம்.நான் நலமாக இருக்கிறேன்.நீங்கள் அங்கு நலமா?நேற்று பள்ளித்திடலில் ஒரு பணப்பை கிடந்தது. அதில் அதிகமான பணம் இருந்தது. அதனை எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் சென்று ஒப்படைத்தேன்.தலைமை ஆசிரியர் மிகவும் மகிழ்ந்து என்னைப் பாராட்டினார். பரிசு வழங்கினார்.உண்மை உயர்த்தும் என்பதைப்புரிந்து கொண்டேன். மாமாவிடம் என் அன்பைச் சொல்லுங்கள். மற்றறைவை நேரில்.

**இப்படிக்கு,**
**தங்கள் அன்புள்ள,**
அஅஅ.

**உறைமேல் முகவரி:**

**பெறுநர்**

ம.அமுதா
71, தமிழ் நகர்,
மதுரை-2.

**7.உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்**

அஅஅ,
45,கண்ணகி வீதி,
இஇஇ

**பெறுநர்**

மின்வாரிய செயற்பொறியாளர் அவர்கள்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
இஇஇ

**பொருள்:** தெருவிளக்குகள் பழுது நீக்குதல் – வேண்டி.

**மதிப்பிற்குரிய ஐயா,**

வணக்கம். நேற்று பெய்த மழையால் தெருவில் உள்ள மின்விளக்கு கம்பங்கள் அனைத்தும் சாய்ந்துவிட்டன. இதனால் மின் விளக்குகள் எதுவும் எறிவதில்லை. மிதிவண்டியில் வந்த ஒருவர் கீழே விழுந்து இறந்துவிட்டார். இரவில் மிகவும் இருட்டாக இருப்பதால் வண்டியில் செல்பவர்களுக்கும் நடந்து செல்பவர்களுக்கும் தடுமாற்றமாக உள்ளது. அதனால் மின்விளக்குகளைச் சரிசெய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

**நாள்:---** **இப்படிக்கு,**
**இடம்: இஇஇ** தெருமக்கள் சார்பாக,
அஅஅ.

**உறைமேல் முகவரி:**

**பெறுநர்**

மின்வாரிய செயற்பொறியாளர் அவர்கள்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
இஇஇ

**8.உம் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்கவிழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்குக.**

- ❖ மாணவர்களே! நாளைய பாரதமே! இந்த முகாம் மூலம் வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறேன்.
- ❖ சேவை செய்வதற்குப் பணம் தேவை இல்லை.மனம் இருந்தால் போதும். சேவை செய்ய காத்திருக்கும் எதிர்காலக் கண்மணிகளே! நீங்கள் தான் இக்கால அன்னைத் தெரஸாக்கள்
- ❖ மக்கள் தொண்டே! இறைவன் தொண்டு என்பார்கள். அதைப்போலவே நாட்டு நலப்பணித்திட்டம் மூலம் மக்களுக்குச் சேவை செய்ய காத்திருக்கும் சேவைச் செம்மல்களே!
- ❖ உயிர் காப்பவர்களே!நாட்டைத் தூய்மையாக்குவதிலும் நாட்டைப் பசுமையாக்குவதிலும் கனவு கண்டு நனவாக்குங்கள். உங்கள் கைகளால் வைக்கப்படும், இந்த மரங்கள்தான் எதிர்கால உயிர்களைக் காப்பாற்றப் போகின்றது.
- ❖ வாழ்த்துக்களைக் கூறி, என்னுரையை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!

**9.பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடு விழாவுக்கு வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர், பெற்றோர்க்கு பசுமைப் பாதுகாப்பு படை சார்பாக நன்றியுரை எழுதுக.**

**நன்றியுரை**

வணக்கம்,

- ❖ மரங்கள் பற்றிய சிறப்புரை வழங்கி இவ்விழாவை சிறப்பு செய்து கொண்டிருக்கும் வனச்சரக அலுவலர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறோம்.
- ❖ மரக்கன்றுகளைத் தந்து உதவியதற்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
- ❖ முன்னிலை வகித்துக்கொண்டிருக்கும் பெற்றோர் ஆசிரிய கழகத் தலைவர் ஐயா அவர்களுக்கு மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
- ❖ விழாவிற்கு வருகை தந்த பெற்றோர்களுக்கும், தலைமை ஆசிரியர்க்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்கள் அனைவருக்கும் எம் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன்.
- ❖ நன்றி! வணக்கம்!

**நாள் :** **இப்படிக்கு,**
**இடம் : இஇஇ** **பள்ளித் தேசிய பசுமைப்படை,**

**கலைச்சொல் அறிவோம்**

**இயல் -1**

1)Vowel-உயிரெழுத்து 2)Monolingual-ஒரு மொழி 3)Consonant-மெய்யெழுத்து
4)Conversation-உரையாடல் 5)Homograph-ஒப்பெழுத்து 6)Discussion -கலந்துரையாடல்

**இயல் -2**

**1.Storm -** *புயல்* 2.**Land Breeze -** *நிலக்காற்று* 3.Tornado – *சூறாவளி*
4.**Sea Breeze -** *கடற்காற்று* 5.**Tempest – பெருங்காற்று** **6.Whirlwind -** *சுழல்காற்று*

**இயல் -3**

1.Classical literature - செவ்விலக்கியம் 2.Epic literature- காப்பிய இலக்கியம்
3. Devotional literature - பக்தி இலக்கியம் 4.Ancient literature - பண்டைய இலக்கியம்
5.Regional literature - வட்டார இலக்கியம் 6.*Folk* literature- நாட்டுப்புற இலக்கியம்
7.Modern literature- நவீன இலக்கியம்

**இயல் -4**

1.Nanotechnology - மீநுண் தொழில்நுட்பம் 2.Biotechnology - உயிரித் தொழில்நுட்பம்
3.Ultraviolet Rays - புறஊதாக் கதிர்கள் 4. Space Technology - விண்வெளித் தொழில்நுட்பம்
5.Cosmic Rays - விண்வெளிக் கதிர்கள் 6. Infrared Rays - அகச்சிவப்புக் கதிர்கள்

**இயல் -5**

1)Emblem-சின்னம் 2)Thesis- ஆய்வேடு 3)Intellectual- அறிவாளர் 4)Symbolism-குறியீட்டியல்

**இயல் -6**

1)Aesthetics-அழகியல், முருகியல் 2)playright -நாடக ஆசிரியர்
3) storyteller- கதைசொல்லி 4) screenplay -திரைக்கதை

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் -7**

1)Consulate–துணைத்தூதரகம் 2)Guild–வணிகக்குழு 3)Patent- காப்புரிமை
4)Irrigation–பாசனம் 5) Document–ஆவணம் 6)Territory-நிலப்பகுதி

**இயல் -8**

1)Belief-நம்பிக்கை 2)Renaissance-மறுமலர்ச்சி
3)Philosopher-மெய்யியலாளர் 4)Revivalism–மீட்டுருவாக்கம்

**இயல் -9**

1)Humanism-மனித நேயம் 2)Cultural Boundaries–பண்பாட்டு எல்லை
3)Cabinet -அமைச்சரவை 4)Cultural values -பண்பாட்டு விழுமியங்கள்

**அணி இலக்கணம்**

**1.உவமை அணி**

வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

**அணி –** உவமையணி

**இலக்கணம் :**

உவமானம், உவமேயம், உவமஉருபு ஆகியவை வெளிப்படையாக வந்தால் அது உவமையணி ஆகும்.

**விளக்கம்:**

உவமானம்: வேலொடு நின்றான் இடுஎன்றது
உவமேயம் : கோலொடு நின்றான் இரவு
உவம உருபு : போல

உவமானம், உவமேயம், உவமஉருபு ஆகியவை வெளிப்படையாக வந்ததால் இது உவமையணி ஆயிற்று.

**2.தீவக அணியின் வகைகள் யாவை?**

தீவக அணி மூவகைப்படும். முதல் நிலைத் தீவகம்,இடைநிலைத் தீவகம்,கடைநிலைத் தீவகம்.

**3.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. –இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?**

அணி : நிரல்நிறையணி
இலக்கணம்: சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, பொருள் கொள்வது நிரல் நிறை அணி எனப்படும்.

**4.கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக் காட்டுக.**

**இலக்கணம்**

இயல்பான நிகழ்ச்சி யில் கவிஞர் தன் மனக் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

**சான்று**

போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்டல்

**விளக்கம்**

கொடி காற்றில் அசைவது இயல்பான நிகழ்ச்சி, இது கவிஞர் கோவலன் பிறகு கொல்லப்படுவான் என்ற தன் மனக் குறிப்பை ஏற்றிக் கூறியிருப்பதால், இது தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

**5.தீவக அணி (கூடுதல்)**

இலக்கணம்

தீவகம் பொருள் விளக்கு. விளக்கு போல செய்யுளின் ஒரு சொல் செய்யுளில் பல சொற்கேளாடு நின்று பொருள் தருவது தீவக அணி ஆகும்.

சான்று

சேந்தன வேந்தன் நெடுங்கண்.....

விளக்கம்

சேந்தன என்ற சொல் செய்யுளில் பல சொற்களோடு நின்று பொருள் தருவதால் தீவக அணி ஆயிற்று.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6.தன்மையணி அல்லது தன்மை நவிற்சி அணி(கூடுதல்)**

இலக்கணம்

பொருளின் இயற்கையில் அமைந்த உண்மையான இயல்பு தன்மையை கூறுவது தன்மையணி ஆகும். இதனை தன்மை நவிற்சி என்றும் கூறுவர்

சான்று

நெருப்பென்று சொன்னால் நீரிலும் அணையும்
நீரென்று சொன்னால் நெருப்பிலும் வேகும்.
(கண்ணதாசன் பாடல்)

விளக்கம்

நெருப்பு நீரில் அணையும் .நீர் நெருப்பில் வேகும் என்று பொருள்களின் உண்மைத் தன்மையை கூறியதால் .இது தன்மையணி ஆயிற்று.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.(அனைத்துப் படத்திற்கும்)**

சின்ன சின்ன ஓவியம்
சிங்காரமான ஓவியம்
வண்ண வண்ண ஓவியம்
வளமான ஓவியம்
சொல்ல சொல் காவியம்
சொற்குவியலானஓவியம்
சிந்தனைக்கு ஓவியம்
சிறப்பான ஓவியம்
அதுவே இந்த ஓவியம்

ச.சேகர் பதார்ச்சா ,ச.சோ.ச

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# படிவங்கள்

திரு.க.பாபு என்பவர்,"70,மொழி நகர் மதுரை -10"ல் வசிக்கின்றார். அவர் எழுத்தர் பணிக்கு விண்ணப்பிக்கிறார். தேர்வர் தன்னை க.பாபுவாக பாவித்து உரிய படிவம் நிரப்புக.

## பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | க.பாபு |
| 2. பாலினம் | : | ஆண் |
| 3. பிறந்த நாள் மற்றும் வயது | : | 10.10.2000 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | ம.கணபதி —அ.லலிதா |
| 6. வீட்டு முகவரி | : | 70,மொழி நகர்,<br>மதுரை -10 |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | 8883681115 |
| 8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | 410 |
| 9. தாய்மொழி | : | தமிழ் |
| 10. பயின்ற மொழிகள் | : | தமிழ் |
| 11. தட்டச்சு | : | தமிழ்,ஆங்கிலம் : உயர்நிலை |
| 12. கணினி | : | பட்டயம் |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் எழுத்தர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

க.பாபு

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



'25,முகில் வீதி, ஈரோடு-638 001' என்ற முகவரியில் வசிக்கும், திரு.ச.மணி என்பவர் அரசு உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்த தன் மகள் ம.கவிதாவை மேல்நிலை வகுப்பு சேர்க்கிறார். தேர்வர் தன்னைக் கவிதாவாக நினைத்து உரிய படிவம் நிரப்புக.

## மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் : ம.கவிதா
2. பிறந்த தேதி : 15.10.2004
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : ச.மணி — அ.மாலா
5. வீட்டு முகவரி : 25,முகில் வீதி,
ஈரோடு-638 001
6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு : 10ம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு உயர்நிலைப் பள்ளி
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் (100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 643753 மார்ச்-2020 | தமிழ் | 90 |
| | | ஆங்கிலம் | 80 |
| | | கணக்கு | 91 |
| | | அறிவியல் | 100 |
| | | சமூக அறிவியல் | 100 |
| | | மொத்தம் | 461 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : சிறப்புத்தமிழ் - தமிழ் வழி

மாணவ / மாணவியின் கையெழுத்து

ம.கவிதா

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**திரு.ப.கவின் என்பவர், "125,திரு.வி.க.நகர்,நாமக்கல்-4" என்ற முகவரியில் வசிக்கிறார். நூலக உறுப்பினராக இணைவதற்கு மாவட்ட மைய நூலகத்திற்குச் செல்கிறார்.தேர்வர் தம்மைக் கவினாக நினைத்து உரிய படிவம் நிரப்புக.**

**நூலக உறுப்பினர் படிவம்**

**நாமக்கல்** மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய ☑ / கிளை /ஊர்ப்புற நூலகம் **நாமக்கல்**

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண்:

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | ப.கவின் |
| 2. தந்தை பெயர் | : | பழனி |
| 3. பிறந்த தேதி | : | 29-3-2000 |
| 4. வயது | : | 21 |
| 5. படிப்பு | : | 12 ஆம் வகுப்பு |
| 6. தொலைபேசி எண் | : | இல்லை |
| 7. அஞ்சல் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | 125,திரு.வி.க.நகர், நாமக்கல்-4 |

நான் **நாமக்கல் மாவட்ட மைய** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. 60 சந்தா தொகை ரூ. 40 ஆக மொத்தம் ரூ. 100 ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்: **நாமக்கல்** தங்கள் உண்மையுள்ள,

நாள்: 02.02.2021 **ப.கவின்**

திரு / திருமதி / செல்வி/ செல்வன் ________________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)
(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



திரு.இ.பாரதி என்பர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராவதற்குப் படிவம் நிரப்புகிறார்.கீழ்கண்ட அவரின் விவரங்களின் படித் தேர்வர்.தம்மைப் பாரதியாக பாவித்து உரிய படிவம் நிரப்புக.

இல்ல முகவரி : 40.கங்கா நகர், கோவை – 12.

படித்த பள்ளி : அரசினர் மேல்நிலைப் பள்ளி, கோவை -1.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

| | | |
|---|---|---|
| 1. மாணவ ரின் பெயர் | : | இ.பாரதி |
| 2. பாலினம் | : | ஆண் |
| 3. பிறந்த தேதி | : | 10.12.2003 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | இளங்கோ - கலா |
| 6. இரத்த வகை | : | ஆ+ |
| 7. உயரம் மற்றும் எடை | : | 5.6 அடி, 52கிலோ |
| 8. வீட்டு முகவரி | : | 40.கங்கா நகர், கோவை – 12. |
| 9. தொலைபேசி / அலைபேசி எண் | : | 8883681115 |
| 10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | 12ஆம் வகுப்பு |
| 11. பள்ளியின் முகவரி | : | அரசினர் மேல்நிலைப் பள்ளி, கோவை -1. |
| 12. சேர விரும்பும் விளையாட்டு | : | கால் பந்து |

சேர்க்கை எண்:

மாணவரின் கையெழுத்து

இ.பாரதி

தேதி : கோவை

இடம்: 02.02.2021

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

இளங்கோ

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## மனப்பாடப்பகுதி

### அன்னை மொழியே

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே !
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

### முல்லைப்பாட்டு

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்' என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

– நப்பூதனார்

### காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

– அதிவீரராம பாண்டியர்

### திருக்குறள்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பெருமாள் திருமொழி

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.
– குலசேகராழ்வார்

## நீதி வெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.
– கா. ப. செய்குதம்பிப் பாவலர்

## திருவிளையாடற்புராணம்

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.
– பரஞ்சோதி முனிவர்

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை.
– குமரகுருபரர்

## கம்பராமாயணம்

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்,
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண்
விழித்து நோக்கத் தெண்டிரை
யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக வினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ,
–கம்பர்

வெய்யோனொளி தன்மேனியின்வ் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்;
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ?
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.
–கம்பர்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## திருக்குறள்

1.செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
  தியற்கை அறிந்து செயல்.
2.பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
  பொருளல்ல தில்லை பொருள்.
3.குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
  றுண்டாகச் செய்வான் வினை.
4.குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
  சுற்றமாச் சுற்றும் உலகு.
5.இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
  இன்மையே இன்னா தது.

## சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

– இளங்கோவடிகள்

## காலக்கணிதம்

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு:
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

– கண்ணதாசன்

## தேம்பாவணி

நவமணி வடக்க யில்போல்
  நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
  தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
  துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
  ஒலித்து அழுவ போன்றே.

–வீரமாமுனிவர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல்-1

## கற்பவை கற்றபின்

**1)தேன்,நூல்,பை,மலர்,வா இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்து தொடர் மொழிகளாக்குக.**

1)தேன் மிகவும் சுவையானது 2) நூல் பல கல் 3) புத்தகப்பை எங்கே?
4) மலர் மணமிக்கது. 5) ஓடி வா

**2)வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.** காணல்,சிரி,படி,தடு

1) காண் – காட்சி, காணுதல்,காணல், காணாமை 2) சிரி – சிரிப்பு, சிரித்தல், சிரிக்காமை
3)படி – படிப்பு, படித்தல், படிக்காமை 4)தடு தடுப்பு, தடுத்தல், தடுக்காமை

**3)தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

அண்ணன்: **எங்கே** செல்கிறாய்? (தொடர்மொழி)
தம்பி : **கடைக்கு** (தனிமொழி)
அண்ணன்: **எதை** வாங்குகிறாய்(தொடர்மொழி)
தம்பி : **நூல் வாங்குகிறேன்**(தொடர்மொழி)
அண்ணன்: **நூலா?** (தனிமொழி)
தம்பி :**ஆமாம்! நூல் தான்**(தொடர்மொழி)
அண்ணன் : **என்ன நூல் வாங்குகிறாய்?**(தொடர்மொழி)
தம்பி : **திருக்குறள்** (தனிமொழி)

**3)மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன், ஓரிடத்தில் அமர்வேன்: மேலும் கீழும் பார்ப்போம் சுற்றுமுற்றும் பார்ப்பேன் மனம் அமைதி எய்தும்.**

**–இத்தொடரில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

1) அழைக்கும் – அழைத்தல் 2) ஏறுவேன்–ஏறுதல 3) அமர்வேன் – அமர்தல்
4) பார்ப்பேன் – பார்த்தல் 5) எய்தும் – எய்துதல்

**4)கட்டு, சொட்டு,வழிபாடு,கேடு, கோறல் – தொழிற்பெயர்கள் வகைப்படுத்துக.**

1)கட்டு –முதனிலைத் தொழிற்பெயர 2) சொட்டு – முதனிலைத் தொழிற்பெயர்
3) வழிபாடு – விகுதி பெற்ற தொழிற்பெயர் 4) கேடு – முதனிலை திரிந்த தொழிற்பெயர்
5) கோறல் – விகுதி பெற்ற தொழிற்பெயர்

## மொழியை ஆள்வோம்

## மொழிபெயர்ப்பு:

1.If you talk to a man&.. .... -- Nelson Mandela

ஒருவரிடம் ஒருமொழியில் பேசினால்,அது அவன் மூளைக்குச் செல்கிறது.ஆனால் அவனுடைய மொழியில் பேசினால்அதுவே அவன் மனதைத் தொடுகின்றது. – நெல்சன் மண்டேலா

2.Language is the.. - Rita Mae Brown

மொழியே பண்பாட்டின் வழிகாட்டி. அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள் மற்றும் எங்குப் போகிறார்கள் என்பதைச் சொல்லும். – ரிட்டா மே பிரவுண்

**சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

'தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம்
ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே!

**கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.** (குவியல், குலை, மந்தை, கட்டு)

கல்–குவியல் பழம்–குலை புல் –கட்டு ஆடு–மந்தை

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.
2.ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3.நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
4.பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தி தொடர்களை மீள எழுதுக.**

1.உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.

**புவியில்** வாழும் **மானுடர்கள்** சிலர் **பழ**மிருக்கக் காய் உண்பதைப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **துன்பப்படுகின்றனர்.**

2.வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.

வள்ளல் குமணன் **துன்பத்தால்** வாடிவந்த கவிஞனுக்குத் தனது தலையை ஈந்து மங்காப் பெருமை பெற்றான்.

3.நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமுகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.

நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயிலைப்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

4.சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.

**தோட்டத்தில்** பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடி **தேனை** உண்டன.

5.பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**ஆ**ப்போல் **அமைதி**யும் **வேங்கை** போல் **வீரமும் களிறு** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**நயம் பாராட்டுக.**

தேனினும் இனியநற் ...

**மோனை நயம்**

முதலாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை.

ஒண்டமிழ், ஒளிர்தமிழ், ஒளிர்வுறும் – தனித்தமிழ், தண்டமிழ்

**எதுகை நயம்**

இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகைத் தொடை,

தேனினும், ஊனினும், வானினும்

**இயைபு நயம்**

செய்யுளில் கடைசி எழுத்தோ சீரோ அசையோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

செந்தமிழ், ஒண்டமிழ், ஒளிர்தமிழ், வண்டமிழ், தனித்தமிழ், தண்டமிழ்

**அணி நயம்:**

இப்பாடலில் சொற்பொருட் பின்வரு நிலையணியைக் கொண்டுள்ளது.

**சுவை நயம்**

இப்பாடல் பெருமிதச் சுவையில் அமைந்துள்ளது.

## மொழியோடு விளையாடு

**1.தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.** The Golden sun gets ... --------

**காலைக்காட்சி**

கதிரவன் தினமும் காலையில் கதிர்களை வீசி, இருட்டைப் போக்கும், மேகங்கள் சுற்றும். பறவைகள் தன் சிறகுகளை அடிப்பதால் இனிய சூழ்நிலையை உருவாக்கும். வண்ணத்துப் பூச்சி பூக்களைச் சுற்றி ஆடும். அதன் மணம் தென்றல் காற்றை நிரப்பும். காற்று எங்கும் பரவி புத்துணர்வை உருவாக்கும்.

**2.சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்

1.இன்சொல் – பண்புத்தொகை : இன்சொல் இனியது.
2.எழுகதிர் – வினைத்தொகை : எழுகதிர் வருகின்றது.
3.கீரிபாம்பு – உம்மைத்தொகை : கீரிபாம்பு சண்டை போடும்.
4.பூங்குழல் வந்தாள் – அன்மொழித்தொகை : அங்குப் பூங்குழல் வந்தாள்.
5.மலை வாழ்வார் – ஏழாம் வேற்றுமைத் தொகை : குறவர் மலை வாழ்வார்.
6.முத்துப்பல் – உவமைத்தொகை : அவன் பல் முத்துப்பல் போன்றது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன்,பூ

எ.கா: பூமணி

பொன்விலங்கு,செய்வான்,மணிமேகலை,தேன்பூ,விளக்குவான்,வான்மழை,பூமழை தேன்மழை பொன்மணி, பூவிலங்கு,பொன்விளக்கு, செய்தேன்

**குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.**

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்

1.குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டோ?

2.சுவைக்காத இளநீர் : சுவைக்காத இளநீர் உண்டோ?

3. காப்பியச் சுவை : காப்பியச் சுவைக்காதவர் உண்டோ?

4.மனிதகுல மேன்மை : இன்று மனிதகுல மேன்மை உண்டோ? 5.விடுமுறைநாள் : விடுமுறை நாள் உண்டோ?

**எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

| | |
|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | – நான்கு – ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | – எட்டு –அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | – ஐந்து –ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | – நான்கு, இரண்டு– சுஉ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி | – ஆயிரம்– க000 |

**இயல்-2**

**கற்பவை கற்றபின்**

**வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.**

1.அன்புச்செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக்கொண்டிருந்தார்.

அன்புச்செல்வன்–இருபெயரொட்டுப்பண்புத்தொகை, தொடுதிரை–வினைத்தொகை

2.அனைவருக்கும் மோர்ப்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும்.

மோர்ப் பானை–இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை மோர் கொடுக்கவும் –இரண்டாம் வேற்றுமைத் தொகை

3.வெண்டைக்காய்ப் பொரியல் மோர்க்குழம்புக்குப் பொருத்தமாக இருக்கும். வெண்டைக்காய்–இருபெயரொட்டுப் பண்புத்தொகை மோர்க்குழம்பு – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

4.தங்க மீன்கள் தண்ணீர்த் தொட்டியில் விளையாடுகின்றன.

தங்கமீன்கள்– உவமைத்தொகை

–தண்ணீர்த் தொட்டியில் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

**மொழியை ஆள்வோம்**

**1.தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.** The Golden sun gets ... --------

**காலைக்காட்சி**

கதிரவன் தினமும் காலையில் கதிர்களை வீசி, இருட்டைப் போக்கும், மேகங்கள் சுற்றும். பறவைகள் தன் சிறகுகளை அடிப்பதால் இனிய சூழ்நிலையை உருவாக்கும். வண்ணத்துப் பூச்சி பூக்களைச் சுற்றி ஆடும். அதன் மணம் தென்றல் காற்றை நிரப்பும். காற்று எங்கும் பரவி புத்துணர்வை உருவாக்கும்.

**2.சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்

1.இன்சொல் – பண்புத்தொகை : இன்சொல் இனியது.

2.எழுகதிர் – வினைத்தொகை : எழுகதிர் வருகின்றது.

3.கீரிபாம்பு – உம்மைத்தொகை : கீரிபாம்பு சண்டை போடும்.

4.பூங்குழல் வந்தாள் – அன்மொழித்தொகை : அங்குப் பூங்குழல் வந்தாள்.

5.மலை வாழ்வார் – ஏழாம் வேற்றுமைத் தொகை : குறவர் மலை வாழ்வார்.

6.முத்துப்பல் – உவமைத்தொகை : அவன் பல் முத்துப்பல் போன்றது.

**மொழியோடு விளையாடு**

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

| | |
|---|---|
| 1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும். | நறுமணம் |
| 2.பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும். | புதுமை |
| 3.இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை. | காற்று |
| 4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும். | விண்மீன் |
| 5. ஓரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம். | காடு |

**நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

1.கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.

காற்றின் பாடல்

2.புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.

மொட்டின் வருகை.

3.சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.

மிதக்கும் வாசம்.

4.இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.

உயிர்ப்பின் ஏக்கம்.

5.நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம். நீரின் சிலிர்ப்பு.

6.குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம். வனத்தின் நடனம்

**(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு.)**

**நிற்க அதற்குத் தக**

**புயலின் போது உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

- ❖ வெளியே செல்ல வேண்டாம்.
- ❖ தொலைபேசி பயன்படுத்த வேண்டாம்.
- ❖ மின்சார சாதனங்கள் பயன்படுத்த வேண்டாம்.
- ❖ வாகனத்தைஓட்டக் கூடாது.
- ❖ கடற்கரை செல்ல வேண்டாம்.

## இயல் –3

## கற்பவை கற்றபின்

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து இறங்கினார் முகமது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

**1.இறங்கினார் முகமது –வினைமுற்றுத் தொடர்**
**2.அவர் பாடகர் –எழுவாய்த் தொடர்**
**3.பாடுவது கேட்பது –கூட்டு வினையெச்சத் தொடர்**
**4.கேட்ட பாடல்கள் –பெயரெச்சத் தொடர்**
**5.கேட்காத பாடல்கள்–எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்**
**6.அடுக்கு அடுக்காக–அடுக்குத் தொடர்**

**வண்ணச் சொற்களின் தொடர் வகைகளை எழுதுக.**

1.**பழகப் பழகப்** பாலும் புளிக்கும் – அடுக்குத்தொடர்
2.**வடித்த கஞ்சியில்** சேலையை அலசினேன்– பெயரெச்சத் தொடர்
3.மேடையில் **நன்றாகப் பேசினான்.** –வினையெச்சத் தொடர்
4.வந்தார் அண்ணன் –வினைமுற்றுத் தொடர்
5.அரிய கவிதைகளின் தொகுப்பு இது. – ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

**மொழிபெயர்க்க.**

Respected ladies and gentleman.....

தமிழர் பண்பாடு

மரியாதைக்கு உரியவர்களே! என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழ் பற்றி பேச வந்திருக்கிறேன். 2000 வருடத்திற்கு முன் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் விளங்கியவர்கள் தமிழர்கள் என்று சங்கஇலக்கியம் கூறுகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழரே இலக்கணம் வகுத்தனர். இந்தியா, ஸ்ரீலங்கா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகமெங்கும் தமிழர்களின் வாழ்க்கையில் தமிழர் பண்பாடு வேரூன்றி உள்ளது. நம் பண்பாடு பழமையானாலும் பண்பாட்டைப் பற்றி அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும். நன்றி!

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பழமொழிகளை நிறைவு செய்க.:**

1.உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே.**

2. ஒரு பானைச் **சோற்றுக்கு, ஒரு சோறு பதம்.**

3.உப்பிட்டவரை **உள்ளளவும் நினை.**

4.விருந்தும் **மருந்தும் மூன்று நாட்கள்.**

5.அளவுக்கு **மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.**

**நயம் பாராட்டுக.**

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்‘. – காளமேகப் புலவர்

**மோனை நயம் :** முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.
சான்று: கத்துகடல், காத்தான் – உலையிலிட, ஊரடங்கும் –அத்தமிக்கும், அரிசி வரும்

**எதுகை நயம் :** இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.
சான்று கத்துகடல், காத்தான், சத்திரத்தில்; அத்தமிக்கும், குத்தி

**அணி நயம் :** இரட்டுற மொழிதல் அணி வந்துள்ளது.

**பா நயம் :** நேரிசை வெண்பா

**மொழியோடு விளையாடு**

**விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடி**

**இறகு** (பறவையிடம் இருப்பது) **அக்கா** (தங்கைக்கு மூத்தவள்) **குருதி** (சிவப்பு நிறத்தில் இருக்கும்)
**மதி** (அறிவின் மறு பெயர்) **வாள்** (மன்னரிடம் இருப்பது) **படகு** (நீரில் செல்வது படகு)

**விடை : திருக்குறள்**

**இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1)சிலை – சீலை : சிலைக்கு சீலை கட்டினர்.
2)தொடு–தோடு: தொடும்போது தோடு ஆடும்.
3)மடு–மாடு : மடுவில் மாடு நின்றது.
4)மலை–மாலை: மலைக்கு மாலை செல்வோம்.
5)வளி – வாளி : வளியை வாளியில் அடைக்க முடியாது
6)விடு – வீடு : கோபத்தை விடு, வீடு கிடைக்கும்.

**இயல் – 4**

**கற்பவை கற்றபின்**

**1.கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். – கால வழுவமைதி,
ஆ)‘இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அனைவரும் ஏற்பர் என்று கூறினான். –இட வழுவமைதி.
இ)சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம். –கால வழுவமைதி.
ஈ)செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனைபுரிந்திருக்கிறார். – காலவழுவமைதி

**2.அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

அ)தந்தை, மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா! என்று சொன்னார்.
(ஆண்பாற் பெயர்களைப் பெண்பாற் பெயர்களாக மாற்றி எழுது)
தாய், ‘மகளே! நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்து வால் என்று சொன்னாள்.

ஆ)அக்கா நேற்று வீட்டுக்குவந்தது.அக்காபுறப்படும்போது அம்மா வழியனுப்பியது.
(வழுவை வழாநிலையாக மாற்றுக)
அக்கா நேற்று வீட்டிற்கு வந்தாள். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினார்.

இ)‘இதோ முடித்துவிடுவேன் என்று செயலை முடிக்கும் முன்பே முன்னர் கூறினார்.
(வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)
இதோ முடித்துவிட்டேன்ல் என்று செயலை முடிக்கும் முன்னர் கூறினார்.

ஈ)அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.
(படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)
நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

உ) குழந்தை அழுகிறான் பார். (வழுவை வழாநிலையாக மாற்றுக).
குழந்தை அழுகிறது பார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## மொழியை ஆள்வோம்

**வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.**

காகத்திற்கு காது உண்டா?அதற்குகாதுகேட்குமா?எல்லா பறவைகளுக்கும் காது உண்டு.செவி துளைகள் இறகுக ளால்மூடி இருக்கும்.மற்றபடிபாலூட்டிகளில் உள்ளதுபோல்புறசெவிமடல் இருக்காது.காகத்திற்குகாது உண்டு.காதுக் கேட்கும்பறவைகளுக்கு பார்த்தல்,கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும்நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம். விடை :

காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காது கேட்குமா? எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித்துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு, காதுக் கேட்கும் பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

**கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

அ)இயற்கை – செயற்கை : இயற்கை மறைந்து செயற்கை பெருகிவருகின்றது.
ஆ)கொடு–கோடு : கொடுத்த எழுதுகோலில் கோடு போட்டான்.
இ) கொள் – கோள் : கோள்களை அறிந்து கொள்வோம்.
ஈ)சிறு – சீறு : சிறு பாம்பும் சீறும்.
உ)தான் – தாம் : தான் சொன்னதைத் தான் செய்தான்.
ஊ) விதி – வீதி : வீதிக்கடைக்கும் விதிமுறைகள் உண்டு.

**பத்தியைப் படித்துப் பதில் தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம்கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறித்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்று நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

வினாக்கள் :

1. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக. விடை: மீண்டும் மீண்டும்.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது? விடை: தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.
3. பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக. விடை : பெய்மழை.
4.இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது? விடை : பெரு வெடிப்புக் கொள்கை
5.உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை? விடை : நிலம், நீர், காற்று,

**நயம் பாராட்டுக.**

**நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்............**

**மோனை நயம்:**

முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும். சான்று: குலாவும், குழம்பைக், குடித்தொரு

**எதுகை நயம் :**

இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும். சான்று: நிலாவையும் –குலாவும், உலாவும் –பலாவின்

**அணி நயம் :**

இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

### மொழியோடு விளையாடு

**தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**

(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் **கற்றல்.**
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை **கரு.**
3. கல் சிலை ஆகுமெனில், நெல் **சோறு** ஆகும்.
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து **எழுத்து.**
5. மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது **பூவில்.**

**குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.**

**எதிர்மறையான சொற்கள்**

1.மீளாத் துயர் – **மீளம் துயர்** **2.**அருகில் அமர்க – தொலைவில் அமர்க
**3.**கொடுத்துச் சிவந்த – கொடுக்காது சிவந்த **4.**மறைத்துக் காட்டு – மறைக்காது காட்டு
5.புயலுக்குப் பின் – புயலுக்கு முன் 6.எழுதாக் கவிதை – எழுதும் கவிதை

**நிற்க அதற்குத் தக**

தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி; திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை; காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்;எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி; –இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

விடை : 1)மட்டைப் பந்து விளையாடச் செய்வேன். 2)நீதிக் கதைகளைக் கூறுவேன்.
3)நூல்களைப் படிக்கச் செய்வேன். 4)மரக்கன்றுகளை நட வைப்பேன்.
5)சமூக சேவை செய்ய வைப்பேன்.

**இயல் – 5**

**கற்பவை கற்றபின்**

**1.வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

**அ) 'காமராசர் நகர் எங்கே இருக்கிறது?இந்த வழியாகச் செல்லுங்கள். – என்று விடையளிப்பது.**

காமராசர் நகர் எங்கே இருக்கிறது? **– அறியாவினா**

'இந்த வழியாகச் செல்லுங்கள் ' என்று விடையளிப்பது. **– சுட்டுவிடை**

ஆ)எனக்கு எழுதித் தருகிறாயா?' என்ற வினாவுக்கு, எனக்கு யார் எழுதித் தருவார்கள்? என்று விடையளிப்பது.

எனக்கு யார் எழுதித்தருவார்கள் என்று விடையளிப்பது. **– வினா எதிர்வினாதல் விடை**

**2.உரையாடலில் இடம் பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

பாமகள் : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? **(அறியா வினா)**

ஆதிரை: ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். **(நேர் விடை)**

பாமகள்: அப்படியா! என்ன தலைப்பு? **(அறியா வினா)**

ஆதிரை: கல்வியில் சிறக்கும் தமிழர்! **(நேர் விடை)**

நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ? மாட்டீர்களோ? **(ஐய வினா)**

பாமகள் : ஏன் வராமல்? **(வினா எதிர் வினாதல்)**

**மொழியை ஆள்வோம்**

**அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | **சொன்ன அம்மா** | சொல்லிச் சென்றார் | **அம்மாவே வா!** | கதையைச் சொன்னார் |
| தா | **அரசன் தந்தார்** | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | **தந்ததைக் கேட்டார்** |
| பார் | துளிர் பார்த்தாள் | **பார்த்த துளிர்** | பார்த்துச் சிரித்தாள் | **துளிரே செல்!** | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | **வந்து சென்றான்** | குழந்தையே வா! | **குழந்தைக்குத் தந்தான்** |

**தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

1.கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்

**அழகான** கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

2,மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**அதிக** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

3.வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**உலக** வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

4.கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.

**தொழிற்** கல்வியே உயர்வு தரும்.

5.குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

**சிறிய** குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.**

தார் போன்ற நிறமுண்டு கரியுமில்லை......................நான் யார்? விடை : காகம்

**தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1.நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம் நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைத்தல்** நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். (புதைத்தல் / புதையல்)

2.காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது. (சுட்டல் / சுடுதல்)

3.காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது, கைகளில் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல்/தொடுதல்)

4.பசுமையான **காட்சி**ஐக் **காணுதல்** கண்ணுக்கு நல்லது. (காணுதல் /காட்சி)

5.பொது வாழ்வில் **நடித்தல்** கூடாது. **நடிப்பு** இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல் /நடிப்பு)

**நிற்க அதற்குத் தக..**

**பள்ளியில் நான்,வீட்டில் நான் பட்டியலிடுக.**

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| ❖ ஒழுக்கமாக இருப்பேன் | ❖ ஒழுக்கமாக இருப்பேன் |
| ❖ நன்றாகப் படிப்பேன் | ❖ வீட்டுப்பாடம் செய்வேன். |
| ❖ விளையாடுவேன். | ❖ விளையாடுவேன். |
| ❖ நன்கு பாடம் படிப்பேன். | ❖ புத்தகம் படிப்பேன். |
| ❖ நண்பர்களுக்கு உதவுவேன். | ❖ அம்மாவுக்கு உதவுவேன். |

## இயல்-6
## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்ப்பு:**

Kalaignar karunanidhi is known for his..

கலைஞரின் பணிகள்

கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்ப் பணியால்,அனைவராலும் அறியப்பட்டவர்.கவிதைகள், கடிதங்கள்,திரைக்கதை,புதினம்,தன்வரலாறு,வரலாற்றுப் புதினம்,மேடை நாடகம்,வசனங்கள் மற்றும் திரைப்படப் பாடல்கள் என அவரின் தமிழ்ப் பணி பரந்த அளவில் உள்ளது.இவர் குறளோவியம்,தொல்காப்பியப் பூங்கா,பூம்புகார் எனப் பல நூல்களையும் எழுதியுள்ளார்.கலை, கட்டிடக்கலை ஆகியவற்றின் மூலமும் தமிழுக்குப் பங்காற்றியுள்ளார்.சென்னையில் வள்ளுவர் கோட்டம் கட்டிக் கொடுத்தார்.கன்னியாகுமரியில் 133 அடியில் திருவள்ளுவருக்குச் சிலை அமைத்தார்.

**தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

1.அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
(தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக)

**அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.**

2.இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். (தொடர் சொற்றொடராக மாற்றுக)

**இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி,புத்தக அடுக்கங்களில் அடுக்கி,புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.**

3.கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார்.கலைஞர்,எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார் (கலவைச் சொற்றொடராக மாற்றுக.)

**கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டதால் எழுத்து வழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.**

4.முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி,வார இதழாக்கி,நாளேடாக்கினார் கலைஞர்.
(தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.)

**கலைஞர், முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கினார்.பிறகு வார இதழாக்கினார்.அதன் பின்னர் நாளேடாக்கினார் .**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5.ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.
(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

**ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அதனால் அறையில் உள்ளவர்களின் பேச்சு தடைபட்டது.**

**மொழியோடு விளையாடு**

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1.வானம் **கருக்கத்** தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.
2.அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **மலர்ந்தது.**
3.**நல்ல** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4.கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **அழகிய** புல்வெளிகளில் கதிரவனின் கதிர் வெயில் பரவிக் கிடக்கிறது.
5.வெயிலில் அலையாதே; உடல் **கருப்பாகி விடும்.**

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

(துங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும்,மரவீடு,தோற்பாவை,விருது, தோற்பவை,கவிழும், விருந்து.)

1.விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் வீடு.
வெட்டாதீர்கள்– மனிதருக்கு அவைதரும் தரும் **மரவீடு.**
2.காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்.**
சோலைப் பூவினில் வண்டினம் கவிழும்.
3.மலை முகட்டில் மேகம் **தங்கும்**. அதைப்
பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்.**
4.வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும் – இதைத்
தத்துவமாய்த் **தோற்பாவை** கூத்து சொல்லும்.
5.கைதட்டலே கவிஞருக்கு **விருது**. அவையோரின்
ஆர்வமே அவருக்கு **விருந்து.**

**நிற்க அதற்குத் தக........**

நிற்க அதற்குத் தக..

தமிழ்,தமிழர்,தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர்.அவர் எழுதிய தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை;அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை நீங்கள் படித்து முடித்தப் பின் உங்கள் துறையின் அறிவைக் கொண்டு தமிழுக்குச் செய்யக் கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

| | |
|---|---|
| 1 | என் துறையில் வல்லுநரான பின்,அத்துறையினைப் பற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன். |
| 2 | என் துறையில் இருக்கும் கலைச்சொற்களைத் தமிழில் மாற்றி மக்களின் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவேன். |
| 3 | என் துறையில் உள்ளதைப் பிறமொழியில் மொழிமாற்றம் செய்வேன். |
| 4 | என் துறையில் பயன்பபாடு அனைத்தும் தமிழ்மொழியில் மாற்றுவேன். |
| 5 | என் துறை முழுவதும் தமிழில் பராமரிப்பேன். |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## இயல் – 7
## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க.** Among the five ..

மருத நிலம்

பண்டைய காலத்தில், நில அமைப்புப்படி தமிழகம் ஐந்து வகையாக இருந்தது. அதில் மருதம் உழவுத் இருந்தது. அந்த நிலத்தில் உழவர்களுக்கு தேவையான பருவ காலங்கள் சிறந்திருந்தது. தேவையான வளமான நிலம், போதுமான அளவு மழையும் இருந்தது. அதனால் உழவு செழித்தது. மருத கூறுகளாலும், போதுமான சூரிய வெப்பத்தினாலும் பழந்தமிழகத்தில் மருதநிலத்தில் உழவுத்தொழில்தொழிலுக்க ஏற்றதாய் சூரிய வெப்பம், நிலத்தின் இயற்கைச் சிறந்திருந்தது.வரப்போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம்,முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.

**பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

வரப்போகிறேன் – நாளை நான் வரப்போகிறேன்.
இல்லாமல் இருக்கிறது – தமிழகம் நீர் இல்லாமல் இருக்கிறது.
கொஞ்சம் அதிகம் – காய்கறி விலை கொஞ்சம் அதிகம்.
முன்னுக்குப் பின் – முன்னுக்குப் பின் பேசக் கூடாது.
மறக்க நினைக்கிறேன் – துன்பத்தை மறக்க நினைக்கிறேன்.

**தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

நாற்றிசை : நான்கு + நான்கு திசை ச
முத்தமிழ் : மூன்று + மூன்று தமிழ் ங
அறுசுவை : அறு + சுவை ஆறு – சு
முப்பால் : மூன்று + பால் மூன்று – ங
ஐந்திணை : ஐந்து + திணை ஐந்து – ரு
இருதிணை : இரண்டு + இரண்டு திணை – உ

## மொழியோடு விளையாடு

**ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

புதுக்கோட்டை–புதுகை புதுச்சேரி –புதுவை திருச்சிராப்பள்ளி–திருச்சி உதகமண்டலம்–உதகை
கும்பகோணம் – குடந்தை திருநெல்வேலி–நெல்லை கோயம்புத்தூர் கோவை நாகப்பட்டினம்– நாகை
மயிலாப்பூர்–மயிலை மன்னார்குடி– மன்னை சைதாப்பேட்டை –சைதை

## நிற்க அதற்குத் தக..

**கல்வெட்டுகளைப் பாதுகாக்க உங்களால் இயன்ற செயல்களைப் பட்டியலிடுக.**

கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன்.
அவற்றின் மதிப்பைக் குறைக்கும் படி எதுவும் கூற அனுமதிக்கமாட்டேன்.
கல்வெட்டுகளைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன்.
தமிழரின் பெருமையை உணரச் செய்வேன்.
பழங்கால ஆட்சிச் சிறப்பை உணர்த்துவேன்.
மன்னர் வரலாற்றை மக்கள் அறியச் செய்வேன்.

## இயல் – 8

## மொழியை ஆள்வோம்

**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

மனக்கோட்டை : வீடு வாங்க பணம் இல்லாமல் மனக்கோட்டை கட்டக்கூடாது.
கண்ணும் கருத்தும்: கண்ணும் கருத்தாய் படிக்க வேண்டும்.
அள்ளி இறைத்தல்:பணத்தை அள்ளி இறைத்தல் கூடாது.
ஆறப்போடுதல் : பிரச்சினையை ஆறப்போடுதல் வேண்டும்.

**நயம் பாராட்டுக.**

கோடையிலே ..

மோனை நயம்:

அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.
மேடையிலே – மென்காற்று, ஆடையிலே. –ஆடுகின்ற...

எதுகை நயம்:

அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகையாகும்.
இப்பாடலில், கோடையிலே –ஓடையிலே, மேடையிலே –ஆடையிலே

இயைபு நயம்:

இறுதி எழுத்தோ சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.
தண்ணீரே –மலரே

அணி நயம்: உருவக அணி இக்கவிதையில் வந்துள்ளது.

**மொழியோடு விளையாடு**

**சொற்களைப் பிரித்துப் பொருள் தருக.**

1. கானடை: கான் அடை – காட்டைச் சேர்,கான் நடை – காட்டுக்கு நடத்தல், கால் நடை– காலால் நடத்தல்
2.வருந்தாமரை:வரும் தாமரை– தாமரை மலர்,வரும் தா மரை – தாவும் மான் வருகிறது.
வருந்தா மரை – துன்புறாத மான்
3.பிண்ணாக்கு : பிண்ணாக்கு – எள், கடலை ஆட்டும்போது கிடைப்பது,பிள் நாக்கு – பிளவுபட்ட நாக்கு
4.பலகையொலி :பலகை ஒலி– பலகையால் ஏற்படும் ஒலி,பல கை ஒலி – பல கைகள் தட்டும் ஒலி.

**நிற்க அதற்குத் தக..**

**அறங்கள் தரும் நன்மைகள் நாம் செய்ய வேண்டுவன (அறங்கள்)**

- நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல்.
- ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல்.
- சண்டை இருக்காது.
- பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல்.
- துன்பம் வராது மனித நேயத்தோடு நடக்க வேண்டும்.
- நல்ல நண்பர்களைப் பெறலாம். எதிரிகளையும் நண்பராக்கலாம். நட்பு விலகாது.

**இயல் – 9**

**மொழியை ஆள்வோம்**

**மொழிபெயர்ப்பு**

1.Education is what remains after one has forgotten what one has learned in School. - Albert Einstein.

பள்ளியில் கற்றதை மறந்து விட்டால், கற்ற கல்வியினால் பயன் என்ன? – ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

2. Tomorrow is often the busiest day of the week. - Spanish Proverb

இவ்வாரத்தில் நாளை ஒருநாள் மட்டுமே அதிக வேலைப்பளு உள்ளது.–ஸ்பானிசிய பழமொழி

3. It is during our darkest moments that we must focus to see the light. - Aristotle

நம் இருண்ட தருணங்களிலும் ஒளியைப் பார்ப்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.– அரிஸ்டாட்டில்

4.Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. - Winston Churchill.

வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பதும் விதியல்ல. இரண்டுக்காகவும் தொடர்ந்து ஊக்கத்துடனும் முயற்சியுடனும்செயல்படுவதே எண்ணப்படும்.– வின்ஸ்டன் சர்ச்சில்

**உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

1.தாமரை இலை நீர் போல – தீய நண்பரிடம் தாமரை இலைநீர் போலப் பழகுவேண்டும்.
2.மழைமுகம் காணாப் பயிர்போல – நண்பனைப் பார்க்காமல் மழை முகம் காணாப் பயிர்போல வாடினான்.
3.கண்ணினைக் காக்கும் இமைபோல – தாய் கண்ணினைக் காக்கும் இமைபோலக் குழந்தையைக் காக்கிறார்
4.சிலை மேல் எழுத்து போல – ஆசிரியர் நடத்திய பாடங்கள் சிலைமேல் எழுத்து போல் மனதில் பதிந்தது.

**பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.**

சேரனின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை,
'கொல்லிமலையை வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர், இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன,

**பாடலில் இடம்பெற்றுள்ளத் தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிக.**

**கம்பனும்---- புலவர் பெயர்கள் :**

1)கம்பன் 2)உமறுப்புலவர் 3)ஜவ்வாதுப் புலவர் 4) காசிம் புலவர் 5)குணங்குடி மஸ்தான்
6)சேகனாப்புலவர் 7) செய்குதம்பிப் பாவலர்

நிற்க அதற்குத் தக.....

நீங்கள் பிறருக்குச் செய்த உதவிகளைப் பட்டியலிடுக.

- படிக்காத மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தந்தேன்.
- நண்பனுக்கு உணவு கொடுத்தேன்.
- அம்மாவுக்குச் சமையலில் உதவினேன்
- தம்பியை நூலகம் அழைத்துச் சென்றேன்.
- ஏழைக்கு பணம் கொடுத்தேன்.

**ஆக்கம் :**

**ச.சேட்டு மதார்சா,**
**M.A,M,A.,M.PHIL,BEd,PGDTR,DIP.JOUR., DIP.FOLK,PGDI.ANIMATION,TPT**
**ப.ஆ .தமிழ்,**
ஈ. கே. எம். அ. க. மதரஸா இஸ்லாமியா உ.பள்ளி,ஈரோடு 638001.
அலைபேசி : 8883681115
மின்னஞ்சல் :settumatharsha@gmail.com

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com